திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 101 பகுதி : 4 ஏப்ரல்–07



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஏப்ரல்–07

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. இரா குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி. வீரணன் | உறுப்பினர் |
| திரு. மா. ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | தலைவர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |
| டாக்டர். திரு. இரா. மோகன் எம்.ஏ., பிஎச்.டி., | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 101
பகுதி : 4
ஏப்ரல் 2007

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM ★

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் இரா. **அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

பதிப்பாசிரியர் இரா. **சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்

**இதழ்மணம்** 127

**மதுரைத் தமிழ்ச்சங்கம்** 129
- கவிஞர் மா. செயச்சந்திரன்

**முழுமனிதர் யார்?** 129

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

**அரவாடு** ஆய்வு மாணவர் ஜெ. அரங்கராஜ் 130
தமிழ்ப் பல்கலைக்கழகம்

**பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை** 136
ஆசிரியர் : சிவசம்புப் புலவர்
விளக்கவுரை ஆசிரியர் : பேராசிரியர். இரா. சதாசிவம்

**பாம்பாட்டிச் சித்தாந்தம்** 151
முனைவர் பெ. சுயம்பு

**"மு.வ.வா! யார் சார் அது?"** 162
ம.ரா.போ. குருசாமி

# இதழ்மணம்

கவிவேந்தர் கா. வேழவேந்தன் ரோசாவும் அகிலும் மணம் பரப்பும் இயல்பின; உலகம் அவற்றை எப்போதும் விரும்பும்; பசு மக்களுக்குப் பால்சுரந்து உயிர்களை ஓம்புகின்றது. மனித இனம் நலமுடன் வாழப் பசு அருள்சுரந்து வழங்கும் பால் இன்றியமையாதது. அதனால் நம் முன்னோர் பசுவைப் போற்றினர். திருவள்ளுவர் கொடுங்கோல் ஆட்சியில் முதல் பலியாவது பசுவின் பாலே என வருந்துகிறார்.

*"ஆபயன் குன்றும் அறுதொழிலோர்நூல் மறப்பர்*
*காவலன் காவான் எனின்"*

எனப் பசுவின் பால் பயன் குன்றுவதை நூல் கற்றலுக்கும் முதலில் குறிப்பிடுகிறார். நம் கவிவேந்தரும் பசுவை ஓம்புவது நம் மரபு எனக் குறிப்பிடுவது நம் சிறுவர்களுக்கும் ஒரு நல்ல செய்தியாகும். பசுவினைப் போல மக்கள் இனத்திற்கு நன்மை செய்வோர் முழுமனிதர் என்னும் கவிவேந்தரின் செய்தி என்றும் நினைக்கற்பாலது. சுயநலமே வாழ்வாகக் கொண்ட மக்கள் கூட்டத்தில் முழுமனிதர்கள் உருவாக வேண்டும் என்னும் கவிவேந்தரின் கனவு நனவாக வேண்டும்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர் அரங்கராசன் '*அரவாடு*' என்னும் சொல் குறித்த ஆய்வுக்கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இவ்வாய்வாளர் இவ்வொரு சொல்லைக் குறித்துப் பல்வேறு காலங்களில் தமிழ் வரலாற்றில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைத் திறம்படக் கற்றும் சிந்தித்தும் கட்டுரையை வடிவமைத்துள்ளார். கல்வி என்பது முழுநேரப்பணி. திருவள்ளுவர் கல்வியை வாழ்நாள் பணி என்பார். நம் ஆய்வாளர் அரங்கராசன் அத்தகு கல்வி முனைவர்; அவருடைய கல்விப் பணியும் ஆய்வுப் பணியும் சிறப்புற வாழ்த்துவோம்.

பேராசிரியர் முனைவர் பெ. சுயம்பு '*பாம்பாட்டிச் சித்தாந்தம்*' என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கியுள்ளார். நம்முடைய வாசகர்கள் பேராசிரியர் சுயம்பு அவர்களை இலக்கண இலக்கிய ஆசிரியராகவே அறிவார்கள். இப்"*பாம்பாட்டிச்*

*சித்தாந்தம்*" என்னும் கட்டுரை பேராசிரியரை ஒரு மெய்யுணர்வாளராக அறிமுகம் செய்கிறது. இக்கட்டுரை அதிநுட்பமாக மெய்ப்பொருள் சிந்தனைகளைக் கற்போர்க்கு எடுத்துரைக்கிறது. பேராசிரியர் எதனையும் நுட்பமாக உணரும் அறிவுக் கூர்மை உடையவர். அவர்கள் எதனைக் கற்று எழுதினாலும் ஆழமும் பரப்பும் உடைய செய்திகள் கற்பவர்களுக்குக் கிடைக்கும். அந்த வகையில் இக்கட்டுரை மெய்ப்பொருள் நாட்டம் உடையவர்களுக்கு ஒரு தேன்கிண்ணமாக இனிக்கும்.

அடுத்து முதுபெரும் அறிஞர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் ஆங்கிலக் கலப்புத் தமிழ் அநாகரிகத்தைக் குறித்து மனம் நொந்து சில செய்திகளைச் செந்தமிழ் வாசகர்களோடு பகிர்ந்து கொள்வது அனைவரும் சிந்திக்க வேண்டியதாகும். நாளிதழ்கள், வாரஇதழ்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சிகள் எனப் பெரும்பான்மை ஊடகங்கள் பெரும்பான்மை மக்களுடைய அறிவு நலத்தையும் நாகரிக வளர்ச்சியையும் தடை செய்யும் வகையில் கலப்புமொழி உருவாக்கத்தில் ஈடுபட்டிருப்பதை அனைவரும் கருத்தூன்றிச் சிந்திக்க வேண்டும். மக்கள் நலத்திட்டங்களெல்லாம் மக்களின் கல்வி நாகரிகத்தை ஆதாரமாகக் கொண்டதாகும். அத்தகைய அடிப்படையைத் தகர்த்துத் தரைமட்டமாக்கும் முயற்சியில் இவ்வூடகங்களின் முகவர்கள் ஈடுபட்டிருப்பது மக்கள் விரோதச் செயலே ஆகும். இதனை அரசும் மக்களும் சிந்திக்க வேண்டும். இது போன்ற செய்திகளைப் பேராசிரியர் ம.ரா.போ.குருசாமி அவர்கள் சொல்லும் தகுதி உடையவர். பெரியவரின் சொற்களை நாடும், அரசும், மக்களும் கேட்டுப் புரிந்து நடக்க வேண்டும். அத்தகைய நல்லறிவு இல்லாவிட்டால் இந்த நாட்டின் வளர்ச்சிக்கும் நாகரிகத்திற்கும் பாதுகாப்பு இல்லை. மக்கள் நற்றமிழ் வாழ்வு பெற அனைவரும் தக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். செம்மொழித்திட்டம் என்பதெல்லாம் கல்வியாளர்கள் சிலருடைய அறிவுக்கு விருந்தாகலாம். பெரும்பான்மையாக இருக்கக்கூடிய ஆறுகோடித் தமிழர்களுக்கு நல்லதமிழை ஊடகங்கள் வழி உறுதிசெய்ய வேண்டும். வாணிகத்தின் காரணமாகத் தமிழை விலைபேசி விற்பதைச் சட்டங்கள் மூலம் தடைசெய்ய வேண்டும். அதுவே தமிழர் கடமை.

## முழுமனிதர் யார்?

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

எத்தனையோ மலர்சிரிக்கும் சோலை எங்கும்;
ஏன் 'ரோசா' வாசத்தில் மயங்கு கின்றோம்?
எத்தனையோ மரம்வளரும் காட்டில்; ஆங்கே
எழில் 'அகி' லை நம் விழிகள் தேடு வானேன்?
எத்தனையோ விலங்குண்டு மண்மேல்; ஏன்நாம்
இல்லத்தில் நற்'பசு' வை ஓம்பு கின்றோம்?
மொத்தத்தில் நலம்சேர்ப்போர் மட்டும் நல்ல
'முழுமனிதர்'! மற்றவர்கள் மாக்கள் என்போம்!

❀❀❀❀

## மதுரைத் தமிழ்ச்சங்கம்

- கவிஞர் மா. செயச்சந்திரன்,

மதுரைத் தமிழ்ச் சங்க முன்னாள் முதுகலை மாணவர்

செந்தமிழின் செயல்முழக்க வந்தவொரு சங்கம்
சொந்தமெனத் தமிழ்தனையே கொண்டமுது சங்கம்
தென்மதுரை தனிலுதித்த செந்தமிழ்ச் சங்கம்
தென்பாண்டித் துரைத்தேவர் தந்ததமிழ்ச்சங்கம்!

செந்தமிழ்க் கல்லூரி என்றதுமே – உயர்
சிந்தையில் தோன்றிடும் தேன்கவிதை
செந்தமிழ் செம்மொழி என்றதுமே – உள்ளம்
பொங்கிட வந்திடும் மாமகிழ்ச்சி
செந்தமிழ் வளர்த்திடும் மரபோரே – இனி
செங்கோல் ஓச்சுவர் பாரினிலே
செந்தமிழ் செப்பிடும் சங்கமிதே – நனி
ஓங்கிடும் வான்தொடப் பல்லாண்டே!

❀❀❀❀

# அரவாடு

ஜெ. அரங்கராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பன்னெடுங் காலமாகவே ஓர் இனத்தாரைப் பிறிதொரு இனத்தார் அவ்வினத்தார் வழங்கும் பெயரை விடுத்துத் தங்கள் வழக்கத்திற்கேற்பப் பெயரிட்டு வழங்குதல் என்பது இயல்பாகும். இவைத் தோற்றம், வாழ்விடம், மொழி, இனம், திசை முதலான பல்வேறு காரணங்களில் அமையும். அவ்வகையிலேயே நம் தோற்றத்தின் அடிப்படையில் ஆங்கிலேயரை வெள்ளையர் என்றும், வாழ்விடத்தின் அடிப்படையில் சேர நாட்டாரை மலையாளிகள் எனவும், இன அடிப்படையில் வடவரை ஆரியர் என்றும் (ஆரியர் கேழ்வரகு எனும் தவசப் பெயர் ஆய்வுக்குரியது) தமக்கு வடதிசைக்கண் அண்மையில் உள்ளமையால் ஆந்திரரை வடுகர் என்றும் அழைக்கிறோம். இவ்வாறு பல்வகையில் நாம் அயலவர்களை அழைப்பது போலவே நம்மையும் அயலார் பல்வேறு பெயர்களிட்டு அழைத்தனர். அவற்றை மொழித்திரிபால் அமைந்தவை, இழிபொருளால் அமைந்தவை, நாட்டுப்பெயரால் அமைந்தவை, இனமொழி அடையாளங்களைக் கொண்டு அமைந்தவை என்பனவாகப் பகுக்கலாம். மேற்கு நாட்டார் நமக்கு வழங்கின பெயர்கள் பெரும்பாலும் தமிழின் திரிபுகளே. ஆரியர் நமக்கு இட்டு வழங்கிய திராவிடர் எனும் பெயரும் தமிழ் மொழித் திரிபே–கேரளத்தார் நம்மை வழங்கும் “பாண்டி” எனும் சொல் முதலில் தேயத்தின் பெயராலும் பின்பு இழிவழக்காகவும் மாறி வழங்கப்படுகிறது. அதுபோலவே கன்னடர் நம்மை வழங்கும் கொங்கர் எனும் சொல்லும், கொங்கு நாடு கன்னடத்தின் தென்னெல்லை ஆவதாலும் கொங்கு நாட்டவர் அதிகம் அங்கு விரவியதாலும் மேல்கொங்கில் கன்னடர் பரவி, அனைத்துத் தமிழரையும் பொதுவாகக் கொங்கர் என்றே அழைக்கலாயினர். இவ்வாறு பலராலும் பலவாறு அழைக்கப்படும் தமிழர், வடுகரால் அரவர் (அரவாடு) என வழங்கப்படுகின்றனர். அரவர் என அழைக்கப்படுவதற்கான காரணம் பலவாறாகக் கூறப்படுகிறது. அவற்றில் சிலவற்றை ஆராய வேண்டியுள்ளது.

மு. இராகவையங்கார் அவர்கள் தமது தமிழரும் ஆந்திரரும் எனும் நூலில் தமிழரைத் தெலுங்கர் அரவர் என அழைப்பதற்கான

காரணங்களைச் சான்றுகளுடன் விளக்குகிறார். அவை "அரவம் என்ற வடசொற்கு ஒலி என்பது பொருளாயிருத்தல் கொண்டு ஆந்திரர்க்குத் தமிழ் வெற்றொலியாகவே கேட்கப்பட்டமை பற்றி அதற்கு அப்பெயர் வழங்கலாயிற்று என்று தெலுங்கர் சிலர் பொருள் கூறுவதுண்டு. இது விநோதமான விற்பத்தியேயாகும். பழைய ஆந்திரர் தமிழர்க்கு வழங்கி வந்த பெயர் அருவர் என்பதேயன்றி அரவர் என்பதன்று. கலிங்கப் போரிலே அந்நாட்டுச் சேனைகள் சோழர் படையைக் கண்டு தமிழர்! தமிழர்! என்று கதறி நடுங்கியது என்பதைக் கூறவந்தவிடத்தே சயங்கொண்டார்,

*"அருவர்! அருவர்! என விறைஞ்சினர்*
*அபய மபய மென நடுங்கியே"*

என்று பாடுகின்றார். இவ்வாறே சோழர் நடத்திய அப்பெரும் போரைப் பற்றிய பழைய வெண்பாவொன்றும்,

*"ஒருவரொருவர் மேல் வீழ்ந்து வடநாடர்*
*அருவ ரருவரென வஞ்சி – வெருவந்து*
*தீத்தீத்தீ என்றயர்வர் சென்னி படைவீரர்*
*போர்க்கலிங்க மீதெழுந்த போது"*

என்று தண்டியலங்காரத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இவற்றால் அருவர் என்பதே ஆந்திரர் தமிழர்க்கு வழங்கிய பழைய பெயர் என்பது வெளிப்படையாம். தெலுங்கு தேசத்தையொட்டியுள்ள தமிழகத்தின் பகுதிகள் அருவா, அருவாவடதலை என்ற நாடுகளாம். இந்நாட்டாரை அருவாளர் என்பது பழைய தமிழ் வழக்கு. தம் பக்கத்து வாழும் தமிழராகிய இவ்வருவா நாட்டாரையே வடுகர் முதலில் அருவர் என வழங்க அதுவே தமிழர்க்கெல்லாம் உரிய பொதுப் பெயராக வழங்கலாயிற்று என்று அச்சொற்கு அற்பத்திப் பொருள் கொள்வதே நேரானது என்று கொள்க."

இராகவையங்கார் அருவாளர் என்போர் அருவாநாட்டு நாக இனம் என்பதனை நூலின் எவ்விடத்தும் சுட்டவில்லை. சுட்டியிருந்தால் அவரது பார்வை மாறி இருக்கும்; அவ்வாறில்லாத நிலையில் அவரது கூற்றில் நாம் சில மாறுதல்களைக் கொள்ள நேர்கிறது. அவற்றுள் ஒன்று அரவம் எனும் சொல் எம்மொழியது என்பது. 'அர' எனும் சொல் சிவப்பு நிறத்தைச் சுட்டும் பொருளிலும் ஓசையைக் குறிக்கும் பொருளிலும் வரும். நிறத்தைக் குறித்து வரும்போது அரவிந்தம் (சிவந்த வட்டமான) எனச் செந்தாமரையையும்

அரளிப்பூவையும் அரக்கையும் (ஒருவகைமெழுகு) அர்த்தத்தையும் குறிக்கும். சிவன் என்பதில் உள்ள சிவப்பே அரன் என்பதிலும் உள்ளது.

அடுத்து அரவம் எனும் சொல் ஓசையைக் குறிக்கும் பொருளில் வருவது. இதனை இருவகையாகக் கொள்ளலாம். ஒன்று சீரற்ற ஓசை. மற்றொன்று சீரான ஓசை.

*"வடியாக் கிளவி மனங்கொளல் வேண்டும்*
*குரவர் பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ*
*டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது*
*கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்*
*பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி"*

—சிலம்பு—புறஞ்சேரி இருத்த காதை (88—92)

இவ்வடிகளுக்கு உரை கூறும் நல்லார்,

*"அஃது அறியாது என் பிழைப்போ என்று அவலித்து அரற்றிக் கவலித்துக் கையாற்றின்கண் நெஞ்சமுக நின்றது"*

எனும் கூற்றில் அரற்றி எனும் சொல்லை ஓசையுடன் அழுதலைக் குறிக்கப் பயன்படுத்துகிறார். சிலை எனும் சொல் எப்படி வில் எனும் ஆயுதத்தைக் குறிக்கிறதோ அதுபோல அரம் எனும் சொல் வாளையும் இரும்பை அறுக்கும் கருவியையும் ஓசைப் பொருள் படக்குறிக்கிறது. வாளுடன் வாள்மோதும்போது ஓசை எழும். ஆகவே அது வாளரம் எனப்பட்டது.

*"விலங்கரம் பொரூஉம் வெள்வளை போழ்நரோ"*

(விலங்கரம் — வாளரம் - மணி— கச்சிமாநகர் புக்கக்காதை — 44)

இரும்பை அறுக்கும்போதும் இழைக்கும் போதும் ஓசை எழுவதால் அக்கருவி அரம் எனப்பட்டது. இது மிகவும் கூர்மை கொண்டதாகும். அரத்தினால் இரும்பை அறுப்பதற்கு அரவுதல் (அ) ராவுதல் என்று பெயர்.

1) அரவித்தல் — ஒலி செய்தல் — அமரரோடு அசுரர் கூடி அரவித்துக் கடைய (தே.வா 4.70.70)

2) அரவுதல் — ஒலித்தல்—வண்டரவு கொன்றை (தே.வா. 3.81.3)

மேற்கண்டவாறு பெருஞ்சொல்லகராதி விளக்கமளிக்கிறது. கொங்கு வழக்கில் இச்சொற்கள் இன்றும் பயன்பாட்டில் உள்ளன. "அவன் என்ன இந்த ராவு ராவறா? (அரவுதல்) அவள் என்ன இப்படி அரத்தறாள்?

(அரத்தல்) என்பன போலக் கொங்கு மக்களால் சீரற்ற ஓசை எனும் பொருளில் இச்சொல் கையாளப்படுகிறது. இதன் வழி அர சிறப்பு அவ்விகுதி பெற்றுச் சீரான ஓசை எனும் பொருளிலே வழங்குகிறது."

"*அரவ வண்டினம் மார்த்துடனி யாழ் செய்யும்*"

மேற்கண்ட சான்றுகளால் அரவம் (ஓசை, நிறம்) எனும் சொல் தமிழ்ச் சொல்லே, வடசொல் அன்று எனத் தெளிவுறலாம். இச்சொல் தமிழர்களுக்கு ஆன பாங்கினை நோக்குவோம்.

அரவம் எனும் சொல் பாம்பைக் குறிக்கவும் வழங்குகிறது. ஓசையின் அடிப்படையிலேயே இச்சொல் பாம்புகள் அனைத்தையும் குறிப்பதாகத் தோன்றினாலும் சிறப்பாக நாகப் பாம்பினத்தை மட்டுமே குறிக்கிறது. ஏனெனில் மற்றையப் பாம்பினங்கள் யாவற்றைக் காட்டிலும் அதிகப்படியான ஓசை எழுப்புவது நாகமே. அதனாலேயே அதற்கு ஓசையின் அடிப்படையில் அரவம் எனும் பெயர் ஏற்பட்டது. இதனை அரவமே நாகம் என்பதனை அடியார்க்கு நல்லார் உரையிலும் அறியலாம்.

"*நஞ்சமுண்டு நடுங்கு துயருற்றோர்*
*அழல்வாய் நாகத் தாரெயிறழுத்தினர்*"

(சிலம்பு)–இந்திர விழவூரெடுத்த காதை (123–124)

நல்லார்–"அழலும் விடத்தையுடைய அரவின் வாயிற் கூர்ந்த எயிறழுத்தக் கடியுண்டாகும். இவ்விடத்தில் நல்லார் நாகம் எனும் சொல்லை அரவம் என்றே குறிப்பிடுகிறார். இதன் வழி நாகம் என்பதனையே சிறப்பாக (ஓசை எழுப்புதலால்) அரவம் எனும் சொல் குறித்ததாகக் கொள்ளலாம். மேலும் அரவம் எனும் சொல் நாகம் எனும் பொருளிலும் ஓசை எனும் பொருளிலும் புறநானூற்றில் ஒரே பாடலில் பயின்று வருவதைக் காணலாம்."

"*அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலே*
*றணங்குடை யரவி னருந்தலை துமிய*
*நின்று காண்பன்ன நீண்மலை மிளிரக்*
*குன்றுதா வெறியு மரவம் போல*" (புறம்–211)

அரவம் எனும் சொல் நாகத்திற்கு அமைந்தமையால் அரவர் எனும் சொல்லுக்கு நாகர் எனப் பொருளுண்டு. மேலும் அருவாநாடு, அருவாவடதலைநாடு என்பவை நிலவியல் அடிப்படையில் ஆந்திரர்க்கு அருகில் இருந்தமையால் அருவர் என அழைத்தார் என்பதினை ஏற்றுக்

கொள்ளல் இயலாது. ஏனெனில் பண்டைத் தமிழகத்தின் வடவெல்லை வேங்கடமலையும் அதனைச் சார்ந்த புல்லியாண்ட நாடுமேயாகும். அருவா நாடென்பது தென்னாற்காடு மாவட்டத்தின் பெண்ணையாற்றின் தென்பாகம் (கடலூர், மஞ்சக்குப்பம்) அருவாவடதலை என்பது செங்கற்பட்டு மாவட்டம் (ந. கதிரைவேற்பிள்ளை அகராதி) இதற்கு அப்பால் வேங்கடமலையும் அதற்கு அப்பாலேயே வடுகர் நாடும் உள்ளன. அதனாலேயே இன்றும் வேங்கடத்தை ஒட்டி வாழும் தமிழ்ச் சாதிகளைக் குறிக்க அரவா எனும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

"அரவா–இது தமிழைக் குறிக்கும் பெயர். கொல்லர், வெலமர் போன்ற தெலுங்கு வகுப்பாரின் உட்பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளது. எனினும் இப்பெயர் தெலுங்குப் பகுதியில் குடியேறியுள்ள தமிழ் இடையர்களையும், வேளாளர்களையும், அரவக் கொல்லர், அரவவெலமர் என அழைக்கவே பயன்படுத்தப்படுகிறது." (தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்)

பொதுவாகவே கலிங்கத்துப் பரணி முதலான இலக்கியங்களில் வரும் அருவர் எனும் சொல்லானது அரவர் எனும் சொல்லின் மாற்றாகக் கையாளப்பட்டிருக்கலாம். தெலுங்கர் தமிழரின் இசைச்சார்பான அரவர் எனும் சொல்லைக் கையாள, தமிழரோ அதனை இடச்சார்பான பெயரின் திரிபென எண்ணி அருவர் என இடச்சார்பில் அழைத்திருக்கலாம். அருவர் பற்றி வி. கனகசபை (1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்) பின்வருமாறு கூறுகிறார். "அருவாளர் என்பவர்கள் அருவாநாடு, அருவா வடதலை ஆகிய பகுதிகளில் வாழ்ந்த நாகரின் இடச்சார்பான பெயர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சோழர் வலிமையும் ஏனைத் தமிழரசர் வலிமையும் தற்காலிகமாகச் சிலகாலம் தளர்வுற்றிருந்தது. அச்சமயம் அருவாளர் மரபினரின் கிளையினரான ஒவியர் எயிற்பட்டினத்தில் ஆண்டதுடன் மாவிலங்கையின் மன்னர்களாகவும் விளங்கினர்." இதன்வழித் தமிழ் இலக்கியலார் நாகரின் இனப்பெயரைக் கையாளாமல் இடச்சார்புப் பெயரான அருவர் என்பதனைக் கையாண்டனர் எனத் தெளியலாம்.

சேர, சோழ, பாண்டிய மண்டலங்களைச் சேர்ந்த மக்கள் நாக இனத்தவராகப் பரத கண்டம் முழுவதும் அறியப்படுகின்றனர். இதற்குத் தமிழக ஈழ ஊர்ப் பெயர்களே சான்றுகளாகவும் மற்றும் இம்மக்களின் குடிப்பெயர்களிலும் இது விளங்கும். தமிழ்ப் பல்கலைக்கழகப் பெருஞ் சொல்லகராதி அரவர் என்பதற்குத் தமிழர்

– "அரவர் என்பதுவே தமிழர் ஆகும்" என விளக்கமளிக்கிறது. சேர நாட்டைச் சேர்ந்த நாக வழிபாட்டையுடைய நாகரே பிற்காலத்தில் தமிழின் பிராகிருதத் திரிபால் நாயர் என மருவினர். இன்றும் திருவிதாங்கூரின் நாயர்களின் உட்பிரிவுகளில் அரவன் எனும் ஓர் உட்பிரிவும் அடங்கும். இதுவே அவர்கள் நாகர்களாக விளங்கினமைக்குச் சான்று. (தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்) அப்பகுதியில் அருவா எனும் நிலப்பகுதி எதுவுமில்லை.

தொண்டை நாட்டு நாகர்களுக்கும், பல்லவர்களுக்கும் உள்ள தொடர்பினை ஆராய வேண்டியுள்ளது. பல்லவர்களுக்கு முற்பட்டுத் தொண்டை நாட்டின் எல்லையை ஒட்டிய தென் ஆந்திரப் பகுதியை ஆண்டவர்கள் சாதவாகனர்கள். இவர்களுக்குக் கீழ்ப் பல்லவர்கள் தொண்டை நாட்டுப் பகுதியை ஆண்டார்கள். இச்சாதவாகனர்கள் தம்மை நாக வம்சத்தினர் என்றே அழைத்துக் கொண்டனர். பாம்புச் சின்னம் பொறித்த காசுகளை வெளியிட்டனர். பொதுவாக வடுகவெல்லையில் வாழ்ந்தவர்கள் தம்மை நாகர்கள் என அழைத்து வந்தனர். இதன் தொடர்ச்சியே அரவர் என்ற அழைப்புக்குக் காரணம். சாதவாகனர்களுக்குப் பின் பல்லவர்கள் தனித்து எழுச்சி பெறுகின்றனர். அவர்களின் தோற்றிடம் குறித்துப் பல ஐயப்பாடுகள் உள்ள நிலையில் அவர்கள் மணிபல்லவம் எனும் இலங்கைத் தீவின் வடபாலுள்ள நாக (யாழ்) நாட்டினர் எனும் ஒரு கருத்தும் உண்டு. இதன்படிப் பல்லவர் நாக இனத்தவராகின்றனர். பல்லவர் தமிழர் எனும் ஒரு கருத்தும் உண்டு. இதன்படிப் பல்லவர் நாக இனத்தவராகின்றனர். பல்லவர் தமிழர் எனும் க. அப்பாதுரையாரின் கருத்தும் இதற்கு வலுச் சேர்ப்பதாக உள்ளது. யாழ்குடாநாடே நாகநாடு. நாகதீபம் என்பதனை மணிமேகலையும், தொல்லியற் சான்றும் நமக்கு உறுதி செய்கின்றன. இது குறித்துப் பரமுபுஷ்பரட்ணம் பின்வருமாறு கூறுகிறார். "இதில் சிங்கள மொழி தோன்றும் முன்னரே தமிழ் மொழி பயன்பாட்டிலிருந்ததை இப்பண்பாட்டு மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட தமிழ்ப் பிராமி எழுத்துக்களும் உறுதிப்படுத்துகின்றன. அவற்றுள் அப்பண்பாட்டு வழிவந்த மக்களும் நாக என்ற பெயரைப் பெற்றுள்ளனர் என்பதைப் பூநகரியிற் கிடைத்த் மட்பாண்டச்சாசனம் உறுதிப்படுத்துகிறது." இவ்வாறு அரவர் நாகர் என ஈழம் சேர்ந்த தமிழகம் முழுதும் உள்ள தமிழர் அனைவரும் புறத்தாரால் அறியப்படுகின்றனர். அதிலும் தொண்டை மண்டலம் நாக இனமக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்தபடியாலும் நாக மன்னர்கள் ஆண்டுவந்தபடியாலும் தமிழ் மக்கள் அனைவரும் வடுகர்களால் அரவர் என்றே அழைக்கப்பட்டுப் பின் தெலுங்கு வழங்கிற்கேற்ப 'அடு' விகுதி பெற்று அரவாடு அரவம் என மாறியதாகக் கொள்ளலாம்.

# பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை

(தொடர்ச்சி)

*ஆசிரியர் : சிவசம்புப் புலவர்*
*விளக்கவுரை : பேராசிரியர். இரா. சதாசிவம்*

இக்குடிப் பிறந்தோர் விழுமிய உயர் ஒழுக்கம் பூண்ட தவத்துறை பயின்றோர்; விழுமிய குடிப்பிறப்பும் அதற்குரிய ஒழுக்கமும் தவமும் உடைய அறவோர்; கல்வி கேள்வி மிக்க வித்தகர்கள்; குணமெனும் குன்றேறி நின்ற மாண்பும் கீர்த்தியும் சேதுபதி வழியினர்க்கு உண்டு.

உலகம் எங்கும் இந்து சமயம் கால்கோள் கொள்ளவும் இன்றும் நின்று நிலவவும் எல்லா நாட்டு மக்களுக்கும் பயன்படும்படியாக மடங்களைத் தோற்றுவித்தவர் விவேகானந்தர் என்னும் பெரும் முனிவர் ஆவார். அத்தகைய அருள் முனிவர் இக்குடும்பத்து அரசியல் மாண்பையும் கல்விச் செல்வத்தையும் தவஒழுக்கத்தையும் பற்பல மேடைகளிலும் பல்வேறு நூல்களிலும் குறிப்பிட்டு இருப்பது இப்புலவர் கூற்றிற்கு அரண் செய்வதாகும். பாற்கர சேதுபதி, பொன்னுசாமித் தேவரின் உடன் பிறப்பாகிய முத்துராமலிங்க சேதுபதியின் திரு மகனாவார். அப்பாற்கர சேதுபதியார் பாண்டித்துரைத் தேவருடன் உணர்ச்சி ஒத்த நட்பும் அன்பும் கிழமையும் உடையவர். வழிவழி வந்த இப்பெரும் சான்றோர்களே இக்குடி மாண்பை உயர்த்தியோர். இப்பெருந்தகை இருவரும் அன்பெனும் நாரினால் கட்டப்பட்ட மலர்க்கொத்து எனலாம். அன்பெனும் நார் கொண்டு இக்குடிப் புகழைக் கட்டியவர் பொன்னுசாமித் தேவர்; அவர் இயற்றிய தவ முதிர்வின் விளைவே–விளைச்சலே–நம் பாண்டித்துரைத்தேவர். பாண்டித்துரைத் தேவர் தம் கருத்துக்களால் என்றென்றும் உலகவர்க்குச் சுவைதரும் கன்னலம் கட்டி; கற்கண்டு; என்றும் இனிப்பது; அறிவினால் பெறும் இன்பம்; அதுவே அறியாமையாகிய இருள்நீக்கி இன்பம் தருவது; புலன் இன்பம் சிறுபொழுது சுவை தந்து அழியக்கூடியது; அழியா இன்ப அறிவினால் பெறும் கருத்தின்பமே உயர்ந்தது ஆகும். அத்தகைய அறிவு இன்பம் வழங்கக்கூடிய சுவையறாக் கன்னலம் கட்டி எனப் பாண்டித்துரையார் போற்றப்படுவது என்றும் மாறா உண்மையாகும்.

அவர்தம் கருத்துக்களாலும் செய்கையாலும் உலகவர் சிந்தையுள் மாறா இன்பம் அளிக்கும் கன்னலம் கட்டியாக விளங்குகிறார். ஆர்வத்தினால் உள்ளத்து உணர்வினால் ஐயம் இல்லா அவர் கருத்தின் தெளிவை உணர்ந்து உணர்ச்சியினால் அவரிடத்து நட்பும் அன்பும் பூண்டவர் கருத்தில் சுவையறாக் கன்னலம் கட்டி எனப் புலவர் போற்றுவது சிந்திக்கற்பாலது. ஆன்றோர்கள் தம் காலம் கடந்து நின்று வழிவழியாக வருகின்ற மக்களுக்கு நல் உணர்வு வழங்குவர். அதனால் சீர்மை உடைய நம் பாண்டித்துரையும் கருத்தாலும் செயலாலும் காலத்தை வென்று நின்று, அவருடைய வாழ்வு நெறியை உணர்வார்க்கு, நன்நெறி காட்டும் மூல பண்டாரம், சோர்வுறாப் பாண்டி எனப் போற்றுகின்றார்.

இப்பாண்டித்துரையார் ஊரவர்க்கு உதவுதலில் ஊருணி நீராக விளங்குகிறார். அவ்வூரணி வற்றாத ஊரணியாகவும் நெடிய ஊரணியாகவும் இருக்கிறது; பலதுறை அமைத்துப் பல்லுயிர்களும் நன்நீர் அருந்தி இன்புறுகின்றன. நம் புலவர் பாண்டித்துரையாரை நீர் அருகாத நெடிய ஊருணியே எனத் தேற்றப்பொருளில் உறுதி செய்கிறார். இக்கருத்தினை உலகப்பொதுமறை "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகு அவாம் பேரறிவாளன் திரு" எனப் போற்றும்.

## ஏந்தனையான்

*ஊரெல்லா மோடி யுலையு நமரங்கா*
*ளேரெல்லா மோருருவ மேந்தனையான் – பேரெல்லாந்*
*துன்னியமெய்ப் பாண்டித் துரைவள்ள லைப்பாடி*
*யின்னினிநும் மிற்போ யிரும்.* – (வெண்பா 23)

புலவர்கள் கல்விச் செல்வம் உடையவர்கள். அவர்கள் உலகியல் வாழ்க்கைக்குத் தேவையான பொருட் செல்வத்தைப் போற்றிப் பாதுகாப்பதில்லை. உலகத்து இயற்கை இருவகைப்பட்டது. ஒன்று திருவை விரும்புவது; அது பெரும்பான்மையோர் இயல்பு. பெரும்பான்மை மக்கள் பிறப்பு இறப்பினால் ஆகிய உடம்போடு கூடிய இவ்வுலகத்தின் துன்பத்தினை நினைத்துப் பொருள் ஈட்டுவதும் பொருளைப் பாதுகாப்பதும் மட்டுமே தங்கள் வாழ்க்கை என வாழுகின்றனர். மற்றொரு சாரார் அறிவறிந்து தெள்ளியராதலையே போற்றுகின்றனர். இதனைத் திருவள்ளுவர் உலக இயற்கையாகக் குறிப்பிடுகிறார். இயற்கை என்பதால் இவ்விருசாராரும் தங்கள் தங்கள்

நிலையில் உறுதியாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. தெள்ளியோராகிய புலவர் உடம்போடு கூடிய உலக வாழ்க்கையை நடத்துதற்கு அவர்களுடைய வீட்டு அடுப்பில் உலை ஏற்ற வேண்டும். வயிற்றுக்குச் சோறிட வேண்டும்; அத்துன்பத்தால் இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்ட தெள்ளியோர் பறவைகளைப் போலச் சிறுபொருளுக்காக ஏங்க வேண்டிய அவலம் உள்ளது. இந்த அவலச் செய்யுள்களே சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படையின் கருப்பொருள். நம் புலவரும் தாம் பெற்ற பெருவளம் தம்மையொத்த புலவர்களும் பெறுதல் பொருட்டுப் பாண்டித்துரையிடம் ஆற்றுப்படுத்துகின்றார். தன்னை ஒத்த புலவர்கள் என்பது நமரங்காள் என்னும் சொல்லால் விளங்கும். அத்தகு சான்றோர்கள் வறுமையால் வாடி அலைகிறார்கள் என்பது ஊரெல்லாம் ஓடி உலையும் நமரங்காள் என்னும் தொடரில் புலனாகும். உலையும் நமரங்காள் என்பது அகமும் புறமும் புலவர்கள் வறுமைத் துன்பத்தால் படும் மன உளைச்சலையும் புறத்து உலகத்தவர் முன் படும் அவலத்தையும் குறிப்பதாகும். புலவர்களே! பாண்டித்துரையார் முன் பாடுவதும் பரிசில் பெறுவதும் பெருமிதமாகும். "ஏர் எல்லாம் ஓர் ஏந்து அனையான்" எனப் பாண்டித்துரையின் பெருமித வாழ்வை ஆசிரியர் சொல்நயம்படப் பாராட்டுகிறார். பெருமிதம் எல்லாம் ஒரு பொருளாகிய பாண்டித்துரை; அவன் பெருவள்ளல்; அவனைப் பாடுங்கள்; உங்கள் கவலையை விடுங்கள்; அவன் பொருள் தருவான்; உங்கள் இல்லத்திற்குப் போய் இனிது உங்கள் மனைக் கிழத்தியோடு இல்லறம் நடத்துங்கள் எனப் பாண்டித்துரையின் கொடைச் சிறப்பைப் புலவர் போற்றுகின்றார்.

## *சைவ சிகாமணி*

***கலித்துறை***

*இருளா ரிதர மதத்துற்ற செல்வரு மென்னுடைய*
*பொருளார் கவிகட்குப் பொன்மாரி பெய்யப் புரிவித்தசீ*
*ரருளார் முருகற் கயலானென் றிங்குனை யார்பகர்வார்*
*தெருளாரும் பாண்டித்துரைத் தேவ சைவச்சிகாமணியே. (–24)*

நம் பாண்டித்துரையார் தமிழ் வளர்த்தது போலச் சைவமும் வளர்த்த சான்றோர். சிவனைச் சைவன் என்றும் முருகவேளைச் சைவ சிகாமணி என்றும் தமிழ் உலகம் போற்றும். நம் பாண்டித்துரைத்தேவர்

சிறப்பென்னும் செம்பொருள் கண்ட தெளிந்த காட்சியுடையவர். அதனால் நூலாசிரியர் இவரைத் "தெருளாரும் பாண்டித்துரைத்தேவ சைவ சிகாமணியே" என வாழ்த்தி வணங்குகிறார். குமரகுருபரர் காசிமாநகர் சென்று கங்கைக் கரையில் சைவ மடத்தைத் தோற்றுவித்தார். அச்சைவ மடம் இன்றும் புகழ்மிக்கு ஓங்குகிறது. அச்சைவ மடத்தைத் தோற்றுவிப்பதற்கு வேண்டிய பொருளை வேற்றுமதத்தவராகிய ஔரங்கசீப் சுல்தான் வழங்கினார். ஔரங்கசீப் மதநெறியில் மிகவும் இறுக்கமானவர், கஞ்சப்பிரபு. அத்தகையவர் சைவ மடத்தைத் தோற்றுவிப்பதற்குக் குமரகுருபரருக்குப் பெரும்பொருள் வழங்கியது குமரகுருபரரின் தெய்வமாண்பே ஆகும். தெய்வமாண்புடையார் மற்றவருடைய இருள் அகற்றி நன்னெறிப்படுத்தும் பெருமிதம் உடையவராவார். நம் பாண்டித்துரைத் தேவரும் தன்னுடன் உறையும் வேற்று மதத்தவர்களையும் ஈர்த்து ஆட்கொள்ளும் இயல்பினராக விளங்கினார். சிவசம்புப் புலவருடைய கவிமாரி கண்டு பிறமதத்தவர்களும் பாண்டித்துரைத்தேவரின் உபகாரத்தால் பொன்மாரி பெய்தனர். இதனை உணர்ந்த ஆசிரியர் பாண்டித்துரையாரை அருளார்முருகன் என்றும் அயலொன்றும் இல்லை என்றும் உறுதி செய்கிறார். இப்பெரியார் சிவஞானபுரத்து முருகன் மீது காவடிச் சிந்து பாடிய முருகனடிமை. அதனால் அடியவரை முருகன் தன்னில் வேறாகக் கருதான் என்பதனால் ஆசிரியர் கூற்று ஏற்புடைத்தே.

## கமலப்பாண்டித்துரை

***விருத்தம்***

*மணிவளர் தரங்க மறிகடற் குட்ட*
*வான்கல விரைவும்வந் ததிர்ப்பும்*
*பிணிகிளர் மெலிவை மூப்பினிற் றளர்வைப்*
*பெருக்கவுள் ளோய்ந்தபே துறனின்*
*னணிகிள ரவையை யணுகவல் விரைவி*
*னகலுமென் றயிர்ப்புறா தடைந்தேன்*
*கணிகிளர் கடம்பக் கடவுளைத் தொழுங்கைக்*
*கமலப்பாண் டித்துரைக் கனமே. (–25)*

கமல மலர் மேல் வீற்றிருக்கும் சிறப்புடையவள் திருமகள்;

பிரம்மதேவனுடைய இருப்பிடம் தாமரை மலர்; வெள்ளைத் தாமரை மலரில் வீற்றிருப்பவள் கலைமகள்; திருமாலும் கமலமலர் மேல் இருப்பவன் என்பர் உலகவர். இத்தெய்வங்களை வணங்கி வேண்டும் பேற்றினைத் துய்ப்பர் மக்கள். இப்பாண்டித்துரையும் தன்னடைந்தார் துயர் போக்குதலைக்கருதி "கமலப் பாண்டித்துரைக் கனமே" என ஆசிரியர் வியக்கிறார்.

உலக வாழ்க்கைக் கடல் இன்பதுன்பங்களாகிய *அலைகளால் ஓயாத தவிப்பை உண்டாக்குகிறது. கடல் உள்ளவரை* அலை ஓயாது. வாழ்வு உள்ளவரை பிணியும் அதனாலாகிய மெலிவும் மூப்பும் அதன் தளர்வும் கடல் அலை போன்றுள்ளது. அதனுடைய அதிர்வு வாழ்க்கைத் துன்பமாகப் பெருகி உள்ளம் ஓய்ந்து பேதுறுகின்றது. பேதுற்றுத் தளர்ந்து மெலிவுற்ற துயர் நீங்க நின் பேரவையை அடைந்தேன். நின் பேரவை நின்னை ஒத்த சான்றோர்கள் நிறைந்தது. சான்றோர் இருக்கும் இடத்து என் அற்பக் கவலைகளுக்கு இடம் ஏது? என் கவலைகள் போயின. கடம்ப மலரணிந்த முருகக்கடவுளை அடைந்தவர்க்கு இருள் நீங்கி ஒளி பிறக்கும். கடம்ப மரம் இருள்படப் பொதுழிய பராரை மரம் என நக்கீரரால் போற்றப்படுவது. அம்மரத்தை கணிச்சி கொண்டு தாக்கினும் கணிச்சியே மழுங்கும். அதனால் கணிகிளர் கடம்பு எனக் கூறுகிறார். அம்மலரை அணிந்த கடவுளைத் தொழும் குவிந்த கைகள் தாமரை மலர் போலக் காட்சி தருகின்றது. தாமரை மலர் போன்ற குவித்த கைகளினால் சான்றோர்களை வரவேற்கும் போதே அவர்களுடைய முகத்தில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. அவர்களுக்கு வேண்டும் உபகாரங்களைச் செய்வதில் பாண்டித்துரை எப்போதும் அன்புள்ளம் கொண்டவராகவே விளங்குகிறார். அதனால் புலவர்கள் எல்லாம் பாண்டித்துரையின் அவையை அயிர்ப்புறாது விரைந்து அடைந்து புலவர் கூட்டுண்டு கவலை நீங்கி இன்புறுகிறார்கள்.

*"சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்*
*என்னைத் தாங்கிக் கொள்ளே"*

என்று மணிவாசகர் தன்னியல்பையும் இறைவன் இயல்பையும் சொல்ல இங்குப் புலவர் தன் தளர்வை இரண்டடிகளில்

*மணிவளர் தரங்க மறிகடற் குட்ட*

வான்கல விரைவும்வந் ததிர்ப்பும்
பிணிகிளர் மெலிவை மூப்பினிற் றளர்வைப்
பெருக்கவுள் ளோய்ந்தபே துறனின்

என உலகவர் படும் துன்பத்தைத் தன்மேல் ஏற்றி அது நீங்குதற்கு இறைவனை வேண்டும் மணிவாசகர் போலக் 'கணிகிளர் கடம்பக் கடவுளைத் தொழுங்கைக் கமலப் பாண்டித்துரைக் கனமே' என விழிப்பது கருதத்தக்கது.

## தெய்வவீடு

அகவல்

கனங்கொளுந் தண்டமிழ்க் கலையுள வவையெலா
மனங்கொள வடித்துணர் மதிநம ரங்காள்
கல்லாத் திணியிருட் கழுந்தா மனத்தனைச்
செல்லார் மலயச் சிறுமுனி யெனவுங்
கேளையும் புரவாக் கிருபணன் றனைக்கார்
கோளையுண் டெழுஞ்சரற் கொண்மூ வெனவும்
வெடிக்கட லாழ்ந்த வெந்துய ராளனை
யிடிக்கொடி யுயர்த்த விந்திர னெனவும்
பேயும் வெறுக்கும் பிணர்வடி வாளனைப்
பாயுஞ் சுவாகதப் பரியின னெனவு
மறிவிலாச் சேயுர னணைந்தா டுழியும்
பொறையிலாச் சினத்தனைப் பூமிப னெனவுங்
கனவிலும் பொய்யையே கட்டுரைப் பானைச்
சனமெலாம் புகழ்மைச் சத்திய னெனவு
மெண்ணிய வெண்ணியாங் கித்திற மாக
வெண்ணியன் பறாச்சொலா யிருந்தன வற்றி
லொன்றும் விடாம லொருங்குறத் திரட்டி
யென்றும் புனையா வியற்றிநாள் கழித்தனி
ரோவறு தவம்புரிந் துயர்குண முழுது
மேவிய தெய்வ வீடெனத் தேவைவாழ்
சுத்தவுட் பாண்டித் துரையை
யெத்திறச் சொல்லினா லியையுமா சொல்வீரே. (-26)

தமிழ்த் திருநாடு பன்னூறாண்டுகள் தமிழர் அல்லாத அந்நியரால் அரசோச்சப் பெற்றுத் தன் இயல்பு குன்றிய நிலையில்

தண்டமிழ்க் கலை வல்லார் பலர் ஆதரவின்றித் தவித்தனர். சொந்த மண்ணில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. உ.வே. சாமிநாத அய்யர் சிறு வயதில் தமிழ் படித்து வந்தார். அதனைக் கண்டவர்கள் தமிழ்ப் படிப்பு இம்மைக்கும் பயன்படாது, மறுமைக்கும் பயன்படாது என்றனர். ஆங்கிலம் படித்தால் இம்மையில் செல்வம் ஈட்டி அந்நியர் ஆட்சியில் சொந்த மக்களை அதிகாரம் பண்ணலாம். வடமொழி படித்தால் வேத பாராயணம் பண்ணி மறுமைப் பேற்றைத் துய்க்கலாம். இருமைக்கும் பயன்படாத தமிழைப் படித்து சாமிநாதய்யர் ஒருபயனும் அடையார் என்று பேசினர். இதுதான் அன்றைய தமிழ்ப் புலவர் நிலை; அவர்களைத் தமிழ் மக்கள் போற்றவில்லை. போற்றாத அவல நிலையில் தங்களுடைய கல்விச் செல்வத்தைப் பன்றிகள் முன் தூவிய முத்துக்களைப் போலக் கல்வி நலம் இல்லாத செல்வர்கள் முன்பும் அதிகாரம் செய்பவர்கள் முன்பும் சொல்லி அருமை குலைந்தனர்; சிறுமையுற்றனர். ஒருமுறை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சேக்கிழாருடைய பக்திச் செல்வத்தில் ஈடுபட்டுப் பெரிய புராணத் தொடர்ச் சொற்பொழிவு செய்தார். அச்சொற்பொழிவை நிகழ்த்துவதற்கு உதவியாக இடம் பொருள் உதவியவர் கும்பகோணம் வட்டாட்சியர் ஒருவர். அவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் கல்விச்செல்வத்தையும் அருட்செல்வத்தையும் அறியாத பேதை. அதனால் துன்மார்க்கர் ஒருவருடைய போதனையால் பிள்ளை அவர்களுடைய சொற்பொழிவை நிறுத்தி விட்டார். இவ்வாறே பெரும் புலவர்களும் இந்த நாட்டில் கல்லாக் கயவர்களால் அல்லலும் அவலமும் உற்றனர். இவைகள் எல்லாம் நம் தமிழகத்தின் துன்பவரலாற்றின் ஒருபகுதி. அதனை உளம் கொண்ட சிவசம்புப் புலவர் புலவர்களுடைய அவல வாழ்வைச் சொல்லோவியமாக வரைகின்றார். புலவர்கள் கல்வி கேள்விகளால் தன்னை ஒத்தவர்கள் என்பதினாலே,

> *"கனங்கொளுந் தண்டமிழ்க் கலையுள வவையெலா*
> *மனங்கொள வடித்துணர் மதிநம ரங்காள்"*

என அழைத்துத் தன் உள்ளத்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறார். கல்வி கவிந்த இருள் மலம் ஆகிய ஆணவத்தை நீக்கும். கல்வி கேள்வி உடையவரே பெரியார் என நூல்கள் போற்றும். கல்வி கேள்வி ஒளி இல்லாதவர்க்கு இருளாகிய ஆணவ மலம் நீங்காது. அத்தகைய வீணனை மேகங்கள் தவழும் பொதிகைமலைக் குறுமுனி அகத்தியர் என்று உங்கள் வறுமையால் மிடிதீரப் போற்றுகிறீர்கள். அதனை விட்டு

ஒழியுங்கள். அதுமட்டுமன்று தன்னடைந்த உற்றார் உறவினரையும் பாதுகாக்காத இரக்கமற்றவனை கார்க்காலத்தில் மேகம் எனப் போற்றுகிறீர்கள். அது உங்கள் தகுதிக்குப் பொருந்தாது. வறுமையில் துயருற்றுக் கிடப்பவனை மின்னல் கொடியை உடைய இந்திரன் என்று சொல்லுவீர்கள். அதனாலும் உங்களுக்குப் பயன் இல்லை. அஞ்சி வெறுக்கும் பேய் போன்ற தோற்றத்தினை உடையவனைப் பரியேறும் இளவரசன் என்பீர்கள். சின்னஞ்சிறு குழந்தைகள் தன்னை அடைந்து நெருங்கி விளையாடினால் நன்மக்கள் மகிழ்வர். அத்தகைய நல்ல உள்ளம் இல்லாதவர்கள் குழந்தைகளைப் பார்த்துப் பொறாமையினால் பொங்குவார்கள். அத்தகையவர்களைப் பொறுமையில் மிக்க பூமிபாலன் எனப் போற்றுவீர்கள். பொறுமை உடையவர்க்கே பூமி ஆட்சி நிலைக்கும். அஃது இல்லாதவர் அதனை இழந்து வறுமையுறுவர். புலவராகிய நீங்கள் அத்தகைய கீழ் மக்களையும் உங்கள் வறுமையால் பாட நினைக்கிறீர்கள்.

பொய்யே வாழ்க்கையாக உடைய பலர் நெஞ்சில் பொய்யே நினைந்து வாக்கிலும் பொய்யே உரைப்பர். கனவில் கூட பொய்யையே பிறரிடம் எப்படிச் சொல்வது என்று கற்பனை செய்வர். அத்தகைய மூடர்களை மெய்ம்மையாளன் எனச் சொல்ல வறுமை உங்களைத் தூண்டுகிறது. வாய்மையாளர்கள் தீமை அற்றவர்கள்; அத்தகைய மெய்யுணர்வாளர்களை உலகத்து உயிர்கள் எல்லாம் போற்றும். இப்படி உயர்ந்தோர் போற்றும் அறங்களை எல்லாம் வாழ்வாகவுடைய மெய்க்கீர்த்திப் புலவர்கள் எண்ணிய எண்ணியாங்கு திறம்படக் கவி சொல்லும் ஆற்றலும் அன்பறாச் சொல்லும் உடைய சான்றோர்கள் ஆவர். பொய்யா நாவுடைய இப்புலவர் பெருமக்கள் நாடுற்ற கீழ்மையால் தங்கள் நிலை தாழ்ந்து கீழ் மக்களுடைய செவ்வி பார்த்து நாட்களைக் கழிப்பாராயினர்.

புலவர் பெருமக்களே உங்களை வேண்டுவது ஒன்று உண்டு. பாண்டித்துரையைப் புகழுங்கள், போற்றுங்கள். அப்பெரியார் குறைவற்ற தவம் புரிந்து குணநலன் என்னும் குன்றேறி நின்ற தெய்வ வாழ்வினர். உயர் குணம் முழுதும் ஒருங்கு சேர்த்து வைத்த தெய்வ மாளிகை; அவர் நம்மோடு பழகி வாழும் உலகியல் வாழ்வுடையவர்; ஆனால் அவருடைய அகவாழ்வு தெய்வ மாண்புடையது. கேள்வியால் ஆகிய அறிவும் ஞானமும் அக்கேள்வியில் உள்ளம் இடைவிடாது தோய்ந்து நிற்றலினால் மெய்ப்பொருள் காட்சியும் அக்காட்சி தோய்ந்த

பாவனையில் அவர் எப்பொழுதும் உள்முகச் சமாதியில் மேவியவர். இதனை ஆசிரியர்,

> *"ஓவறு தவம் புரிந்துயர்குண முழுது*
> *மேவிய தெய்வ வீடெனத் தேவைவாழ்*
> *சுத்தவுட் பாண்டித் துரையை"*

எனப் போற்றுகின்றார். இதனைப் பரிமேலழகர் கேள்வியால் ஞானமும் இடைவிடாத பாவனையால் தியானமும் தியானிக்கப்படும் பொருள் ஒன்றையே எண்ணி அதனோடு கலந்திருத்தல் சமாதி எனவும் கூறுவர். நம் ஆசிரியர் தேவைவாழ் சுத்த உள் பாண்டித்துரை என அவருடைய மெய்யுணர்வு வாழ்வை – அருள்வாழ்வை – அதி நுட்பமாக எடுத்துரைக்கிறார். உலகவர் பாண்டித்துரைத் தேவரைச் சேதுபதி அரச குடும்பத்தவராகவும், பாலவநத்தம் அதிபதி எனவும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தவர் எனவும் முத்தமிழ் வித்தகர் எனவும் அறிவர். அவரை அருளாட்சி செய்கின்ற மெய்யுணர்வாளர் தேவைவாழ் சுத்தவுள் பாண்டித்துரை எனச் சிவசம்புப் புலவர் ஒருவரே அதி நுட்பமாக அவருடைய தெய்வ ஆற்றலை உலகிற்குத் தன் கவிதை வாயிலாகப் பதிவு செய்துள்ளார். அதனால் உலகவரையும் புலவர்களையும் இத்தகைய அருளாளரை,

> *"எத்திறச் சொல்லினால் இயையுமா சொல்வீரே"*

என வியப்பும் வினாவுமாகத் தன் உணர்வை வெளியிடுகிறார்.

## புகழ்மை

**வெண்பா**

> **சொல்லாரும் பாமாலை சூடினான் வண்மையினா**
> **னெல்லாரு மோர்வடிவா யேய்ந்தனையா – னல்லார்கள்**
> **பல்லாரு மேத்தியிடும் பாண்டித் துரைபுகழ்மை**
> **செல்லாத தெம்மா திரம்.** (-27)

உயிருக்கு ஊதியம் ஈதலால் வரும் புகழே ஆகும். ஈதல் உயிர்க்கு இன்பம் பயப்பது. பொருள் நசை எதனுள்ளும் வைத்து எண்ணப்படுவது ஒன்றன்று; பொருட் பற்றே ஒருவனைச் சிறுமைப்படுத்தும்; உயிருக்கு உறுதி பயவாது, உடம்போடு கூடிய இந்த உயிர் பொருள் ஈட்டும் காலத்துத் துன்பத்தை அடைகிறது.

ஈட்டிய பொருளை அறவழியில் செலவிடும்போதே உயிர்க்குரிய துன்ப நீக்கத்தைப் பெற முடியும். அதனால் சான்றோர் ஈத்து உவக்கும் இன்பம் என்றார். நம் பாண்டித்துரைத் தேவர் வள்ளண்மையினாலும் கல்வி, கேள்வியினாலும் உயர்ந்த ஒழுக்கத்தினாலும் குணங்களினாலும் புலவர் பாடும் புகழுக்குரியவர். அவரைப் பாடும் சொற்கள் பொருள் உடையனவாகின்றன. அச்சொற்களால் தொடுக்கப்பெற்ற பாமாலை என்றும் வாடா மாலையாக விளங்குகிறது. மண்ணில் பிரம்மன் படைத்த மலர் மாலைகள் வாடும் இயல்பின. தகுதியற்றவர்களைப் போற்றிப்பாடிய பாமாலைகளும் காலத்தால் கற்பாரின்றி மறைந்து போகின்றன. ஆனால் சொல்லும் பொருளும் உணர்ந்த சான்றோர் பலரும் பாண்டித்துரையாரைப் பாடிச் சொல்லாரும் பாமாலை அவர் அவையில் பாடினர். பாடிய காலத்து அவையோர்க்கு இன்பப் பேற்றினை நல்கியது போலப் பாண்டித்துரையார் புகழுடம்பு அழியாது எட்டுத் திசையும் புகழ் பரப்பி நிற்றலின் அவரைப் புகழ்ந்து பாடிய சொற்கள் இன்றும் கற்போருக்கும் கேட்போருக்கும் இதழ் மணம் பரப்புகின்றது. இதனை ஆசிரியர்,

*"பாண்டித்துரை புகழ்மை செல்லாதது எம்மாதிரம்"*

என எத்திசையும் புகழ் நிலவும் பாண்டித்துரையின் பெருவாழ்வைப் போற்றுகின்றார்.

### *சீலமலை*

**கலித்துறை**

*திரங்காணுஞ் சீர்ப்பொன்னுச் சாமி*
*தவத்துற்ற சீலமலை*
*சிரங்காணுங் கங்கை யிராமேச*
*னன்பன் றிகழளகா*
*புரங்காணுந் தேவையிற் பாண்டித்*
*துரைச் செல்வன் பூங்கமலக்*
*கரங்காணும் பாவலர் வெங்கலி*
*யோட்டிடுங் கற்பகமே* (–28)

திருவள்ளுவர், தந்தை செய்த அரும் தவத்தினாலேயே நன்மக்கள் பேறு வாய்க்கும் என்பதனை,

*'இவன் தந்தை என்னோற்றான் கொல்'*

என்னும் தொடரில் வலியுறுத்துகின்றார். சீர்மைமிகு சிறப்பின் இலக்கணமாகச் சிறந்து விளங்கும் பொன்னுசாமித் தேவர் அரும் திறல் தவம், பல பிறப்பில் செய்த திறம் காட்ட, சீலம் நோன்பு ஒழுக்கம் ஆகியவை ஒருருக் கொண்டாங்கு காட்சி தருகிறார். சான்றோர் தங்களுடைய தவ மாண்பினாலும் மன அடக்கத்தினாலும் பிற பெறற்கரும் குணநலன்களினாலும் பலகால் பயின்ற ஒழுக்கத்தினாலும் உலகவர் முன் வணக்கத்திற்குரிய தோற்றத்தைப் பெறுவர். அத்தகைய தவ மாண்புடையோர் கண்ணின் சொல்லி செவியின் நோக்கும் புண்ணியப் பேறுடையவர் ஆவர். நம் பொன்னுசாமித் தேவரும் அவருடைய முன்னோர்களும் அருந்தவம் செய்ததனால் பாண்டித்துரைத்தேவர் சேதுநாட்டின் சீலமலையென அவதரித்துள்ளார். கங்கை இறைவனுடைய தலையைக் காணும் பேறு பெற்றாள். அடியார்கள் அவனுடைய திருவடி காணத் தவம் செய்கின்றனர்.

இராமேச்சுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவனின் அன்பன் புகழ்மிக்க அளகாபுரியை ஆளும் குபேரன்; இச்சேதுபதி நாட்டை அளகாபுரியை ஒத்து புகழ்சிறக்கச் செய்தவர் பாண்டித்துரைச் செல்வன். செல்வத்தால் குபேரனை ஒத்த நம் பாண்டித்துரை அளகாபுரிக்கு அரசனாகிய குபேரனைப் போலச் சிவனுக்கு அன்பன். குபேரன் சிவனது அன்பனாதலினாலே பெரும் செல்வத்தைப் பெற்றுக் கற்பகத்தருவைப்போல இராமேச்சுரம் உடையாரை வழிபடுபவர்க்கெல்லாம் வழங்குகின்றான். நம் பாண்டித்துரைத் தேவரும் இராமேச்சுரத்தில் எழுந்தருளியுள்ள இராமநாதனை வழிபடுதலினாலே பெரும் செல்வம் பெற்று குபேரனைப் போல கொடையும் உடையவனாகப் பாவலர்களுடை வறுமைத் துன்பத்தைப் போக்குகின்றான். இப்பாடல் அப்பர்சுவாமிகளுடைய தேவார அடியாகிய,

*"தருமருவு கொடைத் தடக்கை அளகைக்கோன் சங்காத்தி*
*ஆருரில் தனியானை காண்"*

என்னும் தொடரையும் தொடர்ப்பொருளையும் செவ்விதின் பொதிந்து வைத்திருப்பதைக் கண்டு இன்புறலாம். இப்புலவர் பெருமகனார் பண்டை இலக்கியங்களில் தோய்ந்த புலமை உடையவர் என்பதனைக் கற்கும்தோறும் கற்கும்தோறும்

சுவைதரும் சொல்லும் பொருளும் அமைத்து செறுத்த செய்யுட்களால் அறியலாம். இவை அவரை ஒரு செந்நாப்புலவர் என்று பறை சாற்றும்.

**பால்முருவல்**

விருத்தம்

*கற்பகக் கரமு மணிவட நீறு*
*கலந்தொளிர் தோற்றமு முயிர்மாட்*
*டற்பக லாத வுள்ளமு மருந்தண்*
*ணளிவழிந் தொழுகுமா னனமும்*
*பொற்பக லாப்பான் முறுவலும் புகழும்*
........................................................................
*னற்பக ஷிகர்பாண் டித்துரைக் ககலா*
*நன்மையு முன்னைநாட் டவமே.* (–29)

அப்பர் சுவாமிகள் குபேரனைத் தருமருவு கொடைத் தடக்கை அளகைக் கோன் எனப் போற்றியதை முன்பு பார்த்தோம். அக் குபேரன் சிவனுடைய தோழன் என்பதைச் சங்காத்தி என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றார். நம் புலவர் பெருமகனாரும் பாண்டித்துரையை,

"*கற்பகக்கரமு மணி வடநீறு கலந்து ஒளிர் தோற்றம்*"

என்பது முன்னைச் செய்தியை உறுதிப்படுத்தும். இப்பெரியார் அரச குடும்பத்தில் பிறந்து செல்வச் செழிப்பில் வளர்ந்தாலும் உருத்திராக்கமும் திருநீறும் ஒளிர்கின்ற அழகிய தோற்றப் பொலிவுடையவர். எப்போதும் சிவனது திருவருளை நினைப்பிக்கும் திருவேடப் பொலிவுடையவர். இப்பெரியார் அருந்தவப் பயிற்சி உடையவர். அரிய தவம் உடையவர்க்கே உயிர்களிடத்து இடையறா அன்பு உண்டாகும். அன்பு என்பது ஒவ்வொரு உயிரும் அரிதின் முயன்றுபெறத்தக்கது. அன்பு பலகால் பயின்ற ஆர்வத்தால் அருள் சிறக்கும். அவ்வருளே ஒரு உயிர் ஈட்டுதற்குரியது. அதனால் திருவள்ளுவர்,

*"பொருளற்றார் ஒருகால் பூப்பர்; அருளற்றார்*
*மற்று ஆதல் அரிது"*

என அருளது சிறப்பும் அதை எல்லோரும் பெற இயலாது என்பதையும் ஆதல்அரிது என்னும் தொடரில் அறிவுறுத்துகிறார். நம்

பாண்டித்துரையார் எல்லையற்ற பிறப்புக்களில் தவமுயன்றவர். அதனால் அவருக்கு அன்பு கூடியது. திருவாசகத்தில், யானும் பொய் என் நெஞ்சும் பொய் என்அன்பும் பொய் அழுதால் உன்னைப் பெறலாமே' என மணிவாசகர் குறிப்பிடுவார். ஓர் உயிர் பொய்ம்மை நீங்கிப் பெறத்தக்கது அன்பே என்பது திருவாசகத்தின் பொருள். நம் பாண்டித்துரையாரும் மணிவாசகரை ஒத்தவர் என முன் ஒரு பாடலில் குறிப்பிட்டிருப்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது. உயிர்கள் மாட்டு அற்பு அன்பு, அகலாத உள்ளம் என ஆசிரியர் குறிப்பிடுவது உள்ளத்தின் உள் பொருள் அன்பு அதனை ஓர்ந்து உள்ளம் உள்ளது உணரின் பிறப்பு அற்ற பெருவாழ்வு உண்டு என்பார் திருவள்ளுவர். நம் பாண்டித்துரைத் தேவர் உள்ளத்து உள்ளது உயிர்கள் மாட்டு அன்பு எனும் ஆசிரியர் கூற்று, இவர் ஒரு தெளிந்த மெய்யுணர்வாளர் என்பதை விளக்கும். அருந்தண்ணளி வழிந்து ஒழுகும் இயற்கை வாழ்வு இவருடையது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது அனைவருடைய நாவிலும் பயின்று வரும் தமிழ் வழக்கு.

*"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்*
*கடுத்தது காட்டும் முகம்"*

என்பார் திருவள்ளுவர். நம் பாண்டித்துரைத் தேவர் உள்ளத்தாமரையில் பொற்பு அகலாச் சிந்தனையும் திருவருள் நினைவும் அன்புமே நீங்காது இருத்தலினால் அவர் முகத்தில்,

*"பொற்பு அகலாப் பால்முறுவல் புன்னகை"*

எப்போதும் தவழ்ந்து கொண்டே இருக்கிறது. அதனால் இப்பெரியார் அமர்ந்து இனிது நோக்க இன்சொல் உடையவராக விளங்குகின்றார். ஈதலும் இன் சொல்லும் உடையார்க்கு புகழ் விளங்கும். அதனால் இப்பாண்டித்துரைத்தேவர் இள ஞாயிற்றின் தோற்றம் போல உயிர்களுக்கு இன்பம் பயக்கின்றார். இத்தகைய உயர் பிறப்பு பல பிறவிகளில் செய்த *"முன்னைநாள் தவமே"* என ஆசிரியர் போற்றுகின்றார்.

### செம்மனத் துணைவன்

அகவல்

*தவமுற முயன்று சதமக நிரப்பி*
*யுவகையி லுவணையை யோம்பிய பேருடை*
*யன்னவ ரவுணரா லரக்கராற் பிறராற்*
*பன்னருங் காலம் பரிபவ மெய்தித்*

துன்றிய துயர்க்கடற் றோய்ந்தன ரன்றி
யென்றுகொல் ககமா யிருந்தன ரிசைமின்
நம்மனோ ருயிராய் நயனநன் மணியாய்ச்
செம்மனத் துணைவனாய்த் திருவில்வீற் றிருக்கும்
பாண்டித் துரையெனப் பலர்புகழ் நாமம்
பூண்டுத் தமமெலாம் புனைந்தவன் வழிவழி
சேது பதிகளாய்த் திருமுடி புனைந்து
மேதகை படைத்த வேந்தரில் வழியில்
இன்னலங் கடலினி லின்னலெய் தினரென
வின்னமு மொருசொ லெழுந்தில தற்றாற்
சீரிய மதியினிற் றேறில
யாரது தவம்பெரி தேற்றமென் பதுவே. (-30)

சேதுபதி அரசு மக்கள் விரும்பும் மக்கள் நல அரசாக விளங்கியது. மக்களுடைய நடைமுறைகளையும், பழக்கவழக்கங்களையும் கலை, கல்வி, பண்பாடு, நாகரிகம், கோயில் பாதுகாப்பு, திருவிழாக்கள் எனப் பல நிலைகளிலும் மக்கள் மகிழும் வண்ணம் அரசியல் நடத்தினர். அதனால் மக்கள் சேதுபதி ஆட்சியை விரும்பிப் போற்றினர். அக்கம் பக்கத்தில் உள்ள சிற்றரசுகள் இவர்களுடைய ஆட்சிச்சிறப்பைப் போற்றினர். அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படை என்பது திருக்குறள். சேதுபதி அரசு மக்கள் நல அரசாக, மக்கள் மகிழும் அரசாக, மக்கள் விரும்பிப் போற்றும் அரசாக விளங்கியதனால் மக்களுடைய நல் எண்ணத்தைப் பெற்ற நல்லரசாக விளங்கியது. ஒரு ஆட்சி அழிவதற்குரிய தீச்செயல்கள் எதையும் இவ்வரசு செய்யவில்லை. அரசாட்சியை ஒரு தவம் போலச் சேதுபதி குடியில் வந்தோர் வழிவழி பாதுகாத்து வந்தனர். இத்தகைய முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்களுள் தெய்வம்.

ஆனால் வேதங்களில் போற்றப்படுகின்ற தெய்வமாகிய இந்திரன் இன்பப்பேற்றை விரும்பி யாகம், தவம் முயன்றவன். தவமுயன்ற இந்திரன் இந்திரபதவியில் இனிது கோலோச்ச முடியவில்லை. அவனுற்ற துன்பம் சொல்லில் அடங்காது. அவனும் அவனுடைய வீட்டுப்பெண்டிரும் அரக்கர், அவுணர் வீட்டு அடிமைகளாக அல்லலுற்றனர் என்பது எல்லாப் புராண நூல்களும் சொல்லும் 'செய்தியாகும். சேதுபதி அரசர்களும் தவம் முயன்றனர்.

தேவர்களின் தலைவனாகிய இந்திரனும் தவம் முயன்றான். தவம் முயன்ற இந்திரன் பன்னரும் காலம் அரக்கராலும் அவுணராலும் அவலமுற்றுத் துன்புற்றான். நம் சேதுபதி அரசர்கள் தவம் முயன்று சேது நாட்டின் திருமுடி புனைந்து பெருமையுற்றனர். தவம் செய்த இந்திரனும் சேதுபதிகளும் ஒத்த பேற்றினைப் பெறாமல் இந்திரன் அல்லலுற்றுத் துன்புறவும் சேதுபதிகள் திருவீற்றிருக்கும் சிறப்பினராகவும் விளங்குவது ஏன்? தவம் செய்த இருவரும் மாறுபட்ட பலனை அனுபவிப்பது ஒவ்வாத முடிவாக உள்ளது. இதன் *காரணம் என்ன?* இந்திரன் தான் இன்புறுவதையே நோக்கமாகக் கொண்டு ஆட்சி செய்தான். அதனால் அவனுடைய தவமும் அவனுக்கு உதவவில்லை. சேதுபதிகள் உலகு இன்புற ஆட்சி செய்தனர். அதனால் அவர்கள் திரு வீற்றிருக்கும் புகழுடையவர்களாக விளங்குகிறார்கள்.

சேதுபதிகள் இருமை வகை தெரிந்து இவ்உலக வாழ்வில் அறநெறியில் நின்றனர். இந்திரன் அறநெறி நிற்காததனால் இருமையும் இழந்தான். இத்தகு வழிவழி சிறந்த குடிப்பெருமையுடைய பாண்டித்துரையார் புலவர்களுக்கு உயிராய் விளங்குகின்றார். புலவர்கள் உடம்பாகவும் அவ்வுடம்பில் உயிராகப் பாண்டித்துரையும் இருப்பது குறிப்பிடத்தக்கது. பாண்டித்துரை கண்ணின் மணியாக இருந்து இருள் நீக்கி அறிவு ஒளி தருகின்றார். கல்வி இருந்தாலும் இனத்தது இயல்பினாலே மனம் திரியும். பாண்டித்துரைத்தேவர் சான்றோர் இனத்தவர் ஆகையினாலே செம்மனத் துணையினால் புலவர் உயிரிலும் அவர்களுடைய நோக்கிலும் மனத்திலும் வீற்றிருந்து அரசு செய்கிறார். இதனை,

"*நம்மனோர் உயிராய் நயன நன்மணியாய் செம்மனத் துணைவனாய் திருவில் வீற்றிருக்கும் பாண்டித்துரையெனப் பலர்புகழ் நாமம்*"

எனப் போற்றப்படுகிறார். இச் சேதுபதி குடிக்கு அழியாப் புகழை ஈட்டித் தந்த பெருமை பாண்டித்துரைக்குரியது என்பதையும் புலவர் பலர்புகழ் நாமம் வழிவழி போற்றப் புனைந்தவன் என வாழையடி வாழையாகத் தமிழ் மக்கள் இவரைப் போற்றுவர் என்பதையும் எடுத்துரைக்கின்றார்.

(தொடரும்)

# பாம்பாட்டிச் சித்தாந்தம்

முனைவர் பெ. சுயம்பு

## சித்தர்கள்

பாரத மெய்யறிவியல் துறையில் சித்தர்கள் தனிச்சிறப்புப் பெற்றுள்ளனர். இவர்கள் அறிவின் (சித்) அடித்தளத்தில் நின்று ஆன்மவியலை ஆராய்கின்றவர்கள். தாங்கள் ஆராய்ந்து துணிந்த முடிவுகளைத் தம் வாழ்வில் செயற்படுத்தியவர்கள்; அவற்றைப் பொதுமக்களின் வாழ்வியலோடு தொடர்புபடுத்தி, சமுதாயத்தின் முழுமையான மேம்பாட்டிற்கு உரிய கருவியாக மாற்றியவர்கள்; அதன் வாயிலாக, உயர்ந்த அறிஞர்களின் உள்ளத்திலும், புனித நூல்களிலும் முடங்கிக் கிடந்த மெய்யறிவியலை, பொதுமக்களின் உயர்ந்த வாழ்வியலுக்குரிய சித்தாந்தமாக நடமாட விட்டவர்கள்.

## சித்தர்களின் சித்தாந்தம்

சித்தர்களின் சித்தாந்தம் பழுத்த பட்டறிவிலிருந்தும், பல சமயக் கருத்துகளிலிருந்தும் பிழியப் பெற்ற சாறாக விளங்குகிறது. கொள்கை அடிப்படையில் உலகிலுள்ள அனைத்து உயிர்களிடமும், குறிப்பாக அனைத்து மனிதர்களிடமும் சகோதரத்துவத்தைச் சித்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

சித்தர்களின் சித்தாந்தம் சைவ சித்தாந்தத்தைப் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றது. எனினும், அது ஒரு குறிப்பிட்ட சமயச் சார்பை வலியுறுத்தவில்லை; சாதிப் பிரிவினையை ஆன்மீக வாழ்விற்குத் தடைக்கல்லாகக் கருதுகின்றது. ஒரு குறிப்பிட்ட சடங்கு முறையிலான, சமய ஆகமங்களின் அடிப்படையிலான வழிபாட்டு முறையைச் சித்தர்கள் ஏற்கவில்லை. இதனாலேயே 'கோயிலும் மனத்துள்ளே, குளங்களும் மனத்துள்ளே என்று சிவவாக்கியரும், 'சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கி' என்று பத்திரகிரியாரும் கூறுகின்றனர். இத்தகைய வழிபாட்டுமுறை அறிவின் வளர்ச்சிக்கு எல்லையிடுவதோடு, மனித வாழ்வியலின் வழிபாடு மனிதனின் பொருளாதாரத்தை விரயமாக்கிவிடும். அது மனிதனை ஆன்மீகம் என்னும் இறையுணர்விலிருந்து, திரும்பி உடலின் அடிப்படையிலான சமய வெறியை நோக்கிச் செலுத்தக் கூடியது.. இதனாலேயே சித்தர்கள் இவையெல்லாம் ஆன்மீக விடுதலைக்கு எதிரானவை என்று கருதுகின்றனர்.

ஆன்மீக உணர்வினைச் சித்தர்கள் தனிமனிதனின் பிறப்பறுக்கும் மருந்தாக மட்டும் கருதவில்லை. இறப்புக்குப் பின்னரே முழுமையான விடுதலை (முக்தி) என்பதையும் அவர்கள் உடன்படவில்லை. இவ்வுலகில் உடலுடன் வாழுங் காலத்திலேயே பேரின்பமாக வாழவியலும் என்று சித்தர்கள் நம்புகின்றனர். சமுதாயம் முழுவதும் அமைதியாகப் பேரின்பத்தில் திளைக்கும்பொழுது இவ்வுலகம் இறையுலகமாக மாறும் என்பது அவர்களின் திடமான நம்பிக்கை. எனவே சமுதாயம் அளாவிய இன்பநிலையே தனிமனிதனின் இன்பநிலையின் நிலைப்பாடாக அமைகிறது. இதனாலேயே சித்தர்கள், 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' (திருமந்திரம் 2104) என்று சமயம் சாராத இறை நம்பிக்கையை வலியுறுத்துகின்றனர். எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்தனர். (தாயுமானவர் பாடல்கள், பராபரக்கண்ணி 221) 'ஆணும், பெண்ணும் சேர்ந்துலகம் கண்டதே' (சிவவாக்கியர் பாடல்கள், 137) என்று பெண்ணடிமையை எதிர்க்கின்றனர்.

*'சமயபேதம் பலவான சாதி பேதங்கள்*
*சகத்தோர்க்கே அல்லாதுசற் சாதுக் களுக்கோ*
*சிமயத்தி லேறினபேர் சித்தம் மாறுமோ*
*சித்தர்சித் தாந்தம்தேர்ந்து ஆடுபாம்பே'*

என்று பாம்பாட்டிச் சித்தரும் பாடுகின்றார்.

சித்தர்கள் ஆன்மீகக் குறிக்கோளை எய்துதற்கு யோக நெறியைச் சிறந்ததாகக் கருதுகின்றனர். இந்நெறியினைப் 'புண்டரீக மத்தியில் உதித்தெழுந்த சோதி' என்று சிவவாக்கியரும், 'உச்சிக்கு நேரே யுண்ணாக்கு மேல்நிதம் வைத்த விளக்கும் எரியுதடி' என்று கொங்கணரும் விவரிக்கின்றனர்.

யோக நெறிக்கு மன ஒருமைப்பாடும் புலனொழுக்கமுமே (அறம் சார்ந்த ஒழுக்கமுமே) மூலதனங்கள்; ஒரு மந்திரத்தை மனத்தளவில் மவுனமாக நினைத்து உருவேற்றுவதன் (மந்திரஸ்மரண்) வாயிலாக, நுண்ணிய நிலையிலான இறைவனுடன் உயிர் ஒன்றும் என்பது சித்தர்களின் கொள்கை. இம்மந்திர வழிபாடு சித்தர்களிடமும் அவர்களை ஒத்த சமய அறிஞர்களிடமும் உறுதியான நம்பிக்கையைப் பெற்றுள்ளது. 'சிவசிவ என்றிடத் தேவருமாவர்' என்று திருமூலரும், 'இதாம் இதாம் ராமராம ராம என்னும் நாமமே' என்று சிவாக்கியரும் கூறுகின்றனர். மந்திரவழிபாடு மனத்தில் இடைவிடாது நினைப்பவருக்கு நினைக்கும் குறிக்கோளை எய்திடச் செய்யும் என்பதைக் குருநானக்கும் உறுதியாகப் போதிக்கிறார். உலகங்களாகவும், உயிரினங்களாகவும்

பருநிலையில் விரிந்துள்ள இறைவன், நுண்ணிலையில் ஒலி அல்லது ஆகாய வடிவில் ஒடுங்குவதாகச் சித்தர்கள் கருதுகின்றனர்.

*"ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்*
*ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே"*

என்று திருமூலர் உலகங்கள் யாவும் (பிரபஞ்சம்) ஒலியிலிருந்து விரிந்து அதனுள்ளே ஒடுங்குதலைக் குறிப்பிடுகின்றார். வெட்ட வெளியினைச் சார்ந்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி என்று கடுவெளிச் சித்தர் ஒலிக்கு ஆதாரமான வெளியைக் குறிப்பிடுகின்றார். இதனாலேயே அவர்கள் "ஓம், சிவாய நம" என்னும் மந்திரங்களை நினைத்துத் தியானம் செய்வதை இறைவழிபாடாக வலியுறுத்துகின்றனர். இறைவனை அடையும் வழிபாடாக வலியுறுத்துகின்றனர். இறைவனை அடையும் வழியாக அன்பைச் சுட்டிக் காட்டுகின்றார்.

தனிமனிதனின் உடல் நலத்திற்கும் உணர்வு வளத்திற்கும் மட்டுமின்றி, சமூக மேம்பாட்டிற்கும் மனநலமே அடிப்படையாகிறது. இந்நலம் மனம் ஒருமைப்படுங்கால் உருவாகும். மனத்தின் எண்ணங்களாகிய சித்த அலைகளே உலக நடப்பியலுக்குக் காரணமாகின்றன. 'சித்த சலனம், சம்சாரம், நிச்சலம், மோட்சம்' என்னும் முதுமொழி இக்கருத்தின் அடிப்படையிலானதே. இதுவே சித்தர்களின் சித்தாந்தத்திற்குக் கருப்பொருளாகும்.

சித்தர்கள் இறைவனைச் சிவன், சிவம் என்றும் அவ்விறைவன் சிதம்பரத்தில் (அறிவு வெளியில்) திருக்கூத்தாடுவதாகவும் குறிப்பிடுகின்றனர். இதன் வாயிலாகத் தங்களைச் சைவ சமயத்தின் சீர்திருத்தச் செம்மல்களாகப் புலப்படுத்திக் கொள்கின்றனர். இச்சித்தர்கள் சைவ சித்தாந்திகளே அன்றி, சமயச் சடங்கார்ந்த சைவ சமயவாதிகள் அல்லர்.

### பாம்பாட்டிச் சித்தர்

பாம்பாட்டிச் சித்தரைப் பாண்டிய நாட்டவர் என்று கருதுகின்றனர். இதற்கு அரண் செய்யுமாறு சில சொற்கள் இச்சித்தரின் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. குளிகை (17), மெச்சு(19), தும்பு(27), புத்தியில்லாக் கூகை (55), வறையோடு (60) புளியம்பழத்தின் தோடு (72), தெரிசனம் (81), தோண்டியும் தாம்பும் (91), ஆங்காரம் (116), ஆசான் (121), பதனம் (128) என்னும் இச்சொற்கள் தென்பாண்டி மக்களின் பேச்சு வழக்கில் பெரிதும் இடம்பெறுவனவாகும்.

ஆன்மீகக் கருத்துக்களைப் பொதுமக்களிடம் எடுத்துச் சென்ற சித்தர்கள், அம்மக்களின் மொழி நடையில் கருத்துக்களை எடுத்துரைத்தனர். எனவே பாண்டிய நாட்டைச் சேர்ந்த இச்சித்தரும் தமக்கும் தம் மக்களுக்கும் புரியவல்ல கிளைமொழிச் சொற்களைக் கையாண்டுள்ளனர் எனலாம்.

பாம்பாட்டி ஒருவரே மெய்யறிவு எய்திச் சித்தரான நிலையில், பாம்பாட்டிச் சித்தர் என அழைக்கப் பெற்றார் என்னும் கருத்து நிலவுகிறது. இவர் எவ்வினத்தவராயினும், தம் பாடலின் திறத்தால் இவர் அழைக்கப் பெறுகிறார் என்பதே தக்கதாகும். இவர் இயற்றிய பாடல்கள் நூற்றிருபத்தொன்பது. இவற்றுள் நூற்றிருபத்து நான்கு 'ஆடுபாம்பே' என்று பாம்பை விளித்துப் பாடப்பெற்றுள்ளன.

பாம்பாட்டி ஒருவர் நல்ல பாம்பினை ஆட்டுவிப்பது போன்று, சித்தர் பாடல்களை அமைத்துள்ளார். தான் அறிவின் உருவே என்று தன்னிலை உணர்ந்த உயிர் பாம்பாட்டியாகப் படிமம் பெற்றுள்ளது. '***சித்த பிடாரனார்***' (112) என்னும் தொடரால் இதனை அறியலாம். யோக நெறியில் எய்த முயலப்படுகின்ற குண்டலினி சக்தி நல்ல பாம்பாகப் படிமம் பெற்றுள்ளது. குண்டலினி யோகம் வாயிலாகப் பேரின்பம் எய்தலைச் சித்தர் பரிந்துரைக்கிறார்.

*காலிற் சுழுமுனை நின்று கண்டு கொண்டு*
*களித்துக் களித்து நின்றாடு பாம்பே (96)*
*மூலத் தலத்திலே நின்ற கருத்தை*
*முற்றும் சுழுமுனை தன்னில் ஊடே (119)*
*காயக்குடத்திலே நின்ற பாம்பைக்*
*கருணைக் கடலிலே தியங்கவிட்டு*
*நேயச் சுழுமுனை நீடு பாய்ச்சி*
*நித்யமான வத்துவை நிலைக்க நாடி*
*மாயப் பெருவெளி தன்னில் ஏறி*
*மாசற்ற பொருளினை வாய்க்கத் தேடி*
*ஆயத்துறை கடந்தப்பாற் பாழின்*
*ஆனந்தம் சேர்ந்தோம் என்று ஆடுபாம்பே (118)*

இத்தகைய பாடல்கள் பலவற்றில் குண்டலினியோகம் பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

மூலத்தானத்தில் சுருண்டு முடங்கிக் கிடக்கின்ற மகாமாயை ஆகிய குண்டலினி சக்தியைத் திடமான அறிவு உடைய உயிர் (ஸ்திதப்

பிரக்ஞன்) எழுப்பி, மேல்நோக்கிச் செலுத்தி, புருவ நடுவில் நிலைக்கச் செய்து, ஒலியை உமிழச் செய்யும். இந்நிலையில் உயிர் தன் இயல்பு (ஸ்வபாவம்) ஆனந்தமே என்று உணரும். உணரவே பேரானந்தம் எய்தும். பின்னர் நிலைத்து அவ்வானந்த உருவாகவே அமையும்.

*ஆனந்தம் கண்டோம் என்று ஆடுபாம்பே (93)*
*..........................................அப்பாழின்*
*ஆனந்தம் சேர்ந்தோம் என்று ஆடுபாம்பே (118)*
*ஆனந்தமாகி நின்று ஆடுபாம்பே (120)*

பாம்பு சுருண்டும், எழுந்து படம் விரித்து ஆடுவதுமாக இயங்குதல் போலன்றி, தொடர்ச்சியாகப் படம் விரித்து எழுந்தாட வேண்டும் என்பதைக் 'களித்துக் களித்து நின்று ஆடுபாம்பே' (13) என்றும் 'உறுதி பெயராது நின்று ஆடுபாம்பே' (85) என்றும் சித்தர் கூறுகின்றார்.

திட அறிவின் துணையால் புலனொடுங்கி, மன வொருமைப்பாட்டில் நிலைத்த பொழுது, குண்டலினி எழுந்து எழுந்து ஒடுங்குதல் இன்றி, புருவ நடுவில் நிலைத்து ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும். இந்நிலையில் இன்ப உணர்வால் மகிழ்ந்தும் துன்ப உணர்வால் வாடியும் அலைபாய்தல் இன்றி உயிர் ஆனந்த மயமாகி, எங்கும் தன்னையே அன்றி வேறொன்றையும் காணாத பாழ்வெளி நிலையை எய்தும். நாகப்பாம்பின் உச்சியிலுள்ள நாகமணி குண்டலினி ஒளிக்குப் படிமமாகும்.

உயிர் தன்னை உணர்ந்த நிலையில் மகாமாயை மறைப்புக் கூறுகளை அருட்கூறாக மாற்றி அருளும். மகாமாயையின் மறைப்பாற்றலைச் சித்தர், '**பாம்பின் கடுவிடம்**' என்று சுட்டுகிறார்.

*கடுவிடந் தன்னைக் கக்கி ஆடுபாம்பே (25)*

## குறிக்கோளும் வழிமுறையும்

இவ்வுலகம் பேரின்பத்தில் இடையீடின்றித் திளைக்க வேண்டும் என்று பாம்பாட்டிச் சித்தர் விரும்புகின்றார். இதனையே உயிர் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதுகிறார். இக்குறிக்கோளை எய்துதற்கு ஒவ்வோர் உயிரும் பிறப்பு–இறப்பு இல்லாத நிலையை எய்துதல் வேண்டும். இதற்கு இன்பத்தை உணருதல் (காணுதல்), இன்பத்தைச் சேர்ந்திருத்தல் (பற்றுதல்), இன்பமாக ஆதல் என்ற மூன்று படிகளைச் சித்தர் உணர்த்துகிறார்.

## *மெய்க்குரு*

உயிர்கள் விளங்கிய அறிவின அல்ல. அவை உணர்த்த உணரும் அறிவின். எனவே பேரின்பத்தில் உயிர்கள் திளைப்பதற்கான நெறியை இறைவனது அருளே குருவாகி உணர்த்தும். ஆதலால் பேரின்ப நிலையை வேண்டுவோர் அனுபவமுள்ள மெய்க்குரு ஒருவரின் துணையை நாடுதல் இன்றியமையாதது. இக்குரு பேரின்பத்தில் திளைக்கின்ற ஜீவன்முக்தர் என்ற நிலையில் வாழ்பவராவார்.

*பொய்ம்மதங்கள் போதனைசெய் பொய்க்குருக்களைப்*
*புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்*
*மெய்ம்மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்*
*மெய்க்குருவின் பதம்போற்றி ஆடுபாம்பே (11)*
*அங்கையில் கண்ணாடிபோல ஆதி வத்துவை*
*அறிவிக்கும் எங்கள் உயிரான குரு (14)*
*......................எக்காலமும் வாழும்*
*தூயநிலை கண்ட பரிசுத்த குரு (15)*

உயிர்கள் இயல்பில் இன்பமயமானவை. தளையின் தொடர்பினால் அவை பிறந்தும் இறந்தும்–வினைப் பயனில் பற்றுக் கொண்டு இன்புற்றுந் துன்புற்றும் உழல்கின்றன; சத், சித், ஆனந்த மயமான இறைவனைப் பற்றினால் மெய்யறிவு பெற்று, என்றும் அழியாத சத்துநிலை எய்தி, பேரின்பத்தில் திளைக்கவியலும். இதனைக் குரு உணர்த்தும்போது உயிர்கள் உணரும்.

## *மாயபந்தம்*

ஒத்த இயல்புடைய பொருள்களே நன்கு பொருந்தும். இறைவன் பற்றற்றவன். மெய்ப்பொருளாகிய '**பற்றற்றானைப்**' (121) பற்றுதற்கு உயிர்களும் பொய்ப் பந்தங்களாகிய புறப்பற்றையும் அகப்பற்றையும் அறவே துறத்தல் வேண்டும். இதனைச் சித்தர் விரிவாக விதந்தோதுகிறார்.

உலக வாழ்வில் இன்பம் பயக்கும்எனக் கருதப்படுகின்ற அரச பதவி, அணிகலன்கள்,பொருட்செல்வம், ஆடைவகைகள், உணவு வகைகள் யாவும் பயனற்றவை; காமுற்று அழுந்துதல் பேரின்பத்திற்குத் தடைகளை அமைக்கும்; உற்றார், உறவினர் என்ற பாசவுணர்வு உடம்பின் வழிப்பட்டதே அன்றி உயிரின் தொடர்பினதன்று.

*யானை சேனை தேர்பரி யாவும் அணியாய்*
*யமன்வரும்போது துணையாமோ அறிவாய்*
*ஞானம் சற்றும் இல்லாத நாய்கட்குப் புத்தி*
*நாடிவரும்படி நீ நின்று ஆடு பாம்பே (41)*
*மக்கள் பெண்டிர் சுற்றமரு மக்கள் மற்றவர்*
*மாளும்போது கூட அவர் மாள்வதில்லையே (48)*
*கானலைமான் நீரெனவே கண்டு செல்லல்போல்*
*காசினி வாழ்வினை மூடர் கண்டு களிப்பார் (49)*

முற்பிறவியில் செய்த வினைப் பயன்களைத் துய்த்துத் தீர்க்கும் பொருட்டு அவ்வினைகளைக் கொண்டு செய்யப்பெற்ற உடல் உயிர்களுக்கு அருளப்படுகிறது. பேரின்பம் எய்துவதற்கு இவ்வுடலைச் சிறந்த கருவியாகக் கையாளுதலை விடுத்து, உடம்பே இன்பம் என்று தடுமாறுதலைச் சித்தர் பலவாறு கடிந்துரைக்கிறார்.

*ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே*
*உதிரப்பு னலினிலே உண்டை சேர்த்தே*
*வாய்த்த குயவனார் அவர்பண்ணும் பாண்டம்*
*வறையோட்டுக்கு ஆகாதென்று ஆடுபாம்பே (60)*

உடல், சொத்து, சொந்தம் என்னும் புறப்பற்றுகளைத் துறந்திட அறிவுறுத்தும் சித்தர், சுகத்தாசை, களவு, கொலை, காமம், பந்தபாசம் போன்ற உணர்ச்சி வழிப்பட்ட அகப்பற்றுகளையும் அறவே ஒழித்திடுமாறு கூறுகின்றார்.

*தாமரையின் இலையிலே தண்ணீர் தங்காத*
*தன்மைபோலச் சுகத்தாசை தள்ளி (70)*
*கள்ளங்கொலை காமமாதி கண்டித்த எல்லாம்*
*கட்டறுத்துவிட்டு ஞானக் கண்ணைத் திறந்து*
*தெள்ளிதான வெட்டவெளிசிற் சொருபத்தைத்*
*தேர்ந்து பார்த்துச் சிந்தை தெளிந்து ஆடுபாம்பே (71)*
*சொல்லும் புளியம்பழத்தின் தோடு போலவே*
*சுற்றத்திருந்தாலும் அவர் சொந்தங்கள் அற்று*
*நில்லுமனமே நீ பர நின்மலத்திலே*
*நின்றுணை தான் வெறும்பாழென்று ஆடு பாம்பே (72)*

புறப்பற்று, அகப்பற்று இரண்டுமே தளையின் கூறாகிய மாயையினால் உருவாகின்ற பொய்த் தோற்றங்கள் ஆகும். இவற்றைச் சித்தர்

'**மாயபந்தம்**' என்று சுட்டுகிறார். பிறப்பு இறப்பு அற்ற உயிர்கள் மெய்ப்பொருளாகிய மெய்ந்நிலை பெறுதற்கு இறைவனைத் திடமாகச் சார்தலோடு, பொய்த் தோற்றமாகிய இருவகைப் பற்றுகளையும் விடுதல் இன்றியமையாதது.

### *யோகநெறி*

பேரின்ப நிலை எய்துதற்கு உயிர்கள் அகத்தும் புறத்தும் பற்றற்ற ஒழுக்கத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும். அவ்வொழுக்கமாகிய மன ஒழுக்கம், புறவொழுக்கமாகிய அன்புறவு ஆகியவற்றாலான யோகநெறியைப் பாம்பாட்டிச் சித்தர் வலியுறுத்துகின்றார்.

யோகநெறியில் நிற்பவர் தம்மை எதுவுமற்ற பாழ்நிலையில் சேர்ப்பிக்க இயலும். சுத்த பரவெளியாகிய இப்பாழ்நிலையே (நினைப்பற்றநிலையே) இறைவனை எய்தும் நிலையாகும். யோகத்தின் நிறைவாக உயிர்கள் பாழுடன் பாழ் என்ற நிலையில் இறைவனுடன் நெருங்கிக் கலந்து இன்புறும். இதனை எய்துதற்கு மனம் வேறு எதிலும் நாட்டமின்றி, ஏகமாக இறைவனையே நாடி, இறைவன் மயமாகவே ஆதல் வேண்டும். திண்ணமாக எண்ணியார் எண்ணியாங்கு எய்துவர். ஆதலின் மனமும் ஏதுமற்ற பாழாக மாறும். ஏகமாக இறைவனை மனம் பற்றுதலைச் சித்தர், "காந்தம் வலி இரும்புபோல்" என்று கூறுகிறார்.

*ஏகமன மாகநாடி ஆடு பாம்பே(5)*
*மனம்வாக்குக் காயம் மூன்றும் பொருந்தப்*
*புகழ்ந்து புகழ்ந்து நின்று ஆடு பாம்பே (10)*
*காந்தம்வலி இரும்புபோல் காசில் மனத்தைக்*
*காட்சியான வத்துவுடன் கலக்கச் சேர்த்துச்*
*சாந்தமுடன் தோண்டியும் தாம்பும் போலச்*
*சலியாமல் தொடர்ந்து நின்று ஆடுபாம்பே (91)*

### *உரையற்ற மந்திரம்*

மனம் இயங்கும் தன்மை கொண்டது அதனை நிலையாக ஒருமைப்படுத்துதல் அருமை. ஆதலால் மனத்தை ஒருமைப்படுத்துதற்கு யோக நெறியே சிறந்தது என்று சித்தர்கள் கருதுகின்றனர்.

மனம் அடங்கி, ஒரு நிலைப்படுதற்கு மூச்சுக்காற்றை நெறிப்படுத்தலும் இறைவனின் திருப்பெயராகிய மந்திரத்தை மனனம் செய்தலும் சிறந்த வழிகளாகும்.

மூலாதாரத்திலுள்ள காற்று வடிவிலுள்ள குண்டலினி சக்தியை மேல்நோக்கி எழுப்பி, சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி ஆகிய ஆதாரங்களின் ஊடே செலுத்தி, ஆஞ்ஞை எனும் ஆறாவது ஆதாரத்தில் அதனை நிலைப்படுத்தி, அதனால் உண்டாகும் ஒளியையும் அமுத நீரையும் துய்த்துப் பேரின்பத்தில் யோகியர் திளைப்பர்.

*உள்ளத்துக் குள்ளேயே உணர வேண்டும்*
*உள்ளும் புறம்பையும் அறிய வேண்டும்*
*மெள்ளக் கனலை எழுப்ப வேண்டும்*
*வீதிப் புனலிலே செலுத்த வேண்டும்*
*கள்ளப் புலனைக் கடிந்து விட்டு*
*கண்ணுக்கு மூக்கு மேற்காண நின்று*
*தெள்ளு பரஞ்சோதி தன்னைத் தேடிச்*
*சீர்பாதம் கண்டோம் என்று ஆடு பாம்பே (115)*
*மூலத்தலத்திலே நின்ற கருத்தை*
*முற்றும் சுழுமுனை தன்னில் ஊடே*
*மேலத் தலத்திலே விந்து வட்டம்*
*வேலை வழியிலே மேவி வாழும் (119)*

மூச்சினை நெறிப்படுத்துதற்கு யோக ஆசனமும் மந்திர மனனமும் பெரிதும் துணையாகும். மந்திரம் ஆகிய ஒலி வெளியின் காரியமாகும். மந்திரத்தைத் தொடர்ந்து நினைப்பதன் வாயிலாக, நினைப்பவரும் மந்திரத்தின் காரணமாகிய வெளியின் நிலையை எய்த இயலும். எனவே இடைவிடாத மந்திர நினைப்பு (நாமஸ்மரண்) ஒருவரைப் பரவெளியில் கலந்திடச் செய்யும். இதனாலேயே மந்திர நினைப்பினை மெய்யறிஞர்கள் சிறந்த வழிபாட்டு நெறியாகக் கருதுகின்றனர்.

*ஆகார முதலிலே பாம்ப தாக*
*ஆனந்த வயலில் படம்விரித்தே*
*ஊகார முதலிலே யொத்து ஒடுங்கி*
*ஓடி வகாரத்தின் நாவை நீட்டிச்*
*சீகாரம் கிடந்ததோர் மந்திரத்தைச்*
*சித்தப் பிடாரனார் சீபாதம் செய்ய*
*மாகாரப் பிறப்பையும் வேர்அறுத்து*
*மாயபந்தம் கடந்தோம் என்று ஆடு பாம்பே (112)*
*உரையற்ற மந்திரம் சொல்லி மீட்போம் (117)*

யோகம் கைவரப் பெற்றவர்கள் கள்ளப் புலனைந்தும், கட்டறுப்பர் (89). கட்டறுந்த புலன்களும் மனமும் ஒடுங்கி அவியப் பெறுவர். சிந்தை

ஒடுங்கியமையால் தியான நிலையில் திளைப்பர். தூங்காமல் தூங்கியே சுகம் அடைவர் (116). எண்ணிய எண்ணியாங்கு எய்துவர். பிறப்பு இறப்பு அற்ற மரணமிலாப் பெருவாழ்வினை எய்துவர். எவ்வுயிரும் எவ்வுலகும் தாமே ஆகி ஆனந்த வெள்ளமாய் நிற்பர்(9).

இன்பத்தில் திளைப்பதற்கும் துன்பத்தில் உழலுவதற்கும் மனமே காரணம் என்பது சித்தரின் கொள்கை.

*அன்பே இன்பம்*

அன்பும் அறவொழுக்கமுமே உயிர்கள் இறைவனுடன் ஒன்றுவதற்குரிய நெறிகள் என்று சித்தர்கள் கருதுகின்றனர்.

இறைவன் எங்கும் எல்லாமுமாய் விளங்குவதை உணர்ந்த பாம்பாட்டிச் சித்தர், பிறஉயிர்களுக்கு, குறிப்பாக மனிதச் சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டே சிறந்த இறைவழிபாடு என்று கருதுகின்றார். அன்பே முழுமையான பேரின்ப வாழ்வாகிய இறையை உருவாக்கும் என்று நம்புகின்றார்.

அன்புணர்வு சமய, சாதி வேறுபாடுகளை ஒதுக்குகிறது.

*சமய பேதம் பலவானசாதி பேதங்கள்*
*சகத்தோர்க்கே அல்லாது சாதுக்களுக்கோ (99)*
*சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம் (123)*

உருவ வழிபாடு, புனித நூல்களை ஓதுதல், பூசை முறைகள், கோயில் வழிபாடு, புண்ணியத் தலங்களுக்குப் பயணம் செய்தல், புனித நீராடல் போன்ற புறவழிபாடுகள் எல்லாம் பயனற்றவை. இவையாவும் தனி. மனிதனிடம் ஆடம்பரத்தையும் சமுதாயத்தில் பொருளாதார அழிவையும் உருவாக்குவன.

*காடுமலை நதிபதி காசி முதலாய்க்*
*கால்கடுக்க ஓடிற்பலன் காணலாகுமோ (88)*
*உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி (92)*
*சதுர்வேதம் அறுவகைச் சாத்திரம்பல*
*தந்திரம் புராணக்கலை சாற்றும் ஆகமம்*
*விதம்விதமானவான வேறு நூல்களும்*
*வீணான நூல்களே என்று ஆடு பாம்பே (98)*
*ஏட்டுச்சுரைக்காய் கறிக்கிங் கெய்திடாதுபோல்*
*எண்திசை திரிந்தும் கதி எய்தல் இல்லையே*
*நாட்டுக்கொரு கோயில்கட்டி நாளும் பூசித்தே*

*நாதன்பாதம் காண்பீர்கள் என்று ஆடு பாம்பே (94)*
*பூசைசெய்த தாலேசுத்த போதம் வருமோ*
*பூமிவலம் செய்ததனால் புண்ணியம் உண்டோ (100)*

வீண் ஆடம்பரம், நிருவாக முறைகேடு, பொது அதிகாரத்தைத் தன்னலத்தினாலும் அகங்காரத்தினாலும் தவறாகப் பயன்படுத்துதல், கடமை உணர்வு இன்மை போன்ற தவறான ஒழுக்கங்களால் சமுதாய நடைமுறை தடைபடுகிறது. சாதி, சமயம், மொழி, நாடு போன்ற குறுகிய பற்று சமுதாயத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து, அதன் அமைப்பையே சிதைத்துக் கொண்டிருக்கின்றது. ஒருவரையும் அவரது உணர்வுகளையும் மற்றவர் மதியாமல் இழிவு செய்வதனால், சமுதாயத்தில் கொலை வெறி தாண்டவமாடுகிறது. இத்தகைய சீர்கேடுகளைக் களைந்து, உலகை அமைதிப் பூங்காவாக, அதிராத இன்பமாக மாற்றுவதற்கு அன்பும் அறவொழுக்கமும் உடைய யோகநெறி சிறந்த மருந்தாகும்.

தனி மனிதனின் ஒவ்வொரு வாழ்வியலையும் சமுதாயம் பாதிக்கிறது. எனவே அவனது முழுமையான இன்ப வாழ்விற்குச் சமுதாயத்தின் இன்பமயமான அமைப்பு இன்றியமையாதது. ஒவ்வொருவரையும் தன்னலமற்ற கரும யோகியாக, சித்தராக மாற்றவல்லது பாம்பாட்டிச் சித்தர் சித்தாந்தம்.

***இணையற்ற மருந்து***

இன்றைய உலகம் விரைவான – அவசரகதியில் இயங்குகிறது. இது ஒவ்வொரு மனிதனின் மன அமைதியைப் பெரிதும் பாதிக்கிறது. இதனால் நெஞ்சுவலி, இரத்த அழுத்தம் போன்ற பல கொடிய நோய்களுக்கு அவன் ஆளாக நேரிடுகிறது. இக்கொடிய நோய்களைத் தீர்க்கின்ற இணையற்ற மருந்து மனவொருமைப்பாடே. விருப்பு வெறுப்பற்ற மனமுடையோரின் உடலுறுப்புகள் ஒரே சீராக இயங்குவதால், நோயின்றி நெடுங்காலம் இன்பமாக வாழவியலும்.

பாம்பாட்டிச் சித்தரின் கொள்கை ஆன்ம வாழ்விற்கு மட்டுமின்றி, இன்பமயமான உலகியல் வாழ்விற்கும் வழிகாட்டுகின்றது.

# “மு.வ.வா! யார் சார் அது?”

*ம.ரா.போ. குருசாமி*

புறநானூறு முதலான சங்க நூல்களுக்குத் திணை, துறை வகுத்தவர்களின் பணியைக் குறித்துப் பல்கலைச் செல்வர், குருதேவர் தெ.பொ.மீ. அவர்கள் அரிய விளக்கம் தந்துள்ளார். அந்த விளக்கங்களை அவர்கள் தராமல் விட்டிருந்தால், பெரும்பாலான சங்கப் பாடல்கள்— குறிப்பாக அகத்திணைப் பாடல்களின் நுவல்பொருள் நமக்கு விளங்காமலே போயிருக்கும். குறிப்பாக – அகத்துறைப் பாடல்களின் கூற்றுவகை விளக்கங்கள் நமக்கு வழுக்கு நிலத்தில் இயங்குவோர்க்கு வாய்த்த ஊன்றுகோல் போன்றவை. கூற்றுக்கு உரியார் யார், யாருக்கு உரைத்த கூற்று, அஃது எழுந்த பின்னணி யாது என்பவற்றை அந்த விளக்கங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ளாமல் படித்தால், நாடகத் தனிக் கூற்றாகவுள்ள அப்பாடல்கள் நம்மை வெருட்டும். மிரட்டும்.

அதுபோலவே, பண்டை உரையாசிரியர்கள் வழங்கியருளிய உரைகளும் நமக்கு உறுதுணையாக அமைந்து பொருள் விளக்கத்தை அருளுகின்றன.

பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர்களின் அருட்கொடை, தமிழ் பயில்வோர்க்கு அருந்தனமாக வாய்த்து செந்தமிழ்ச் செல்வத்தைத் துய்ப்பதற்கு நமக்கு உதவுகின்றன.

பண்டை உரையாசிரியர்களைப் போலவே ஆழ்வார்களின் அருட் செயல்களுக்கு வாய்த்த உரைகளும் நயம் உணர்த்தி அனுபவிக்கச் செய்வதில் ஒப்பற்றவை. பழந்தமிழ் உரைகள் பொருள் விளக்கத்திற்கு உதவுவன, வைணவ உரைகள் அருளிச் செயல்களை ஆரத்துய்த்து அனுபவிக்க உதவுவன.

தமிழ் இலக்கியச் செல்வங்களில் வைணவ உரைகளுக்கு ஒப்பாக இன்னொன்றைச் சுட்டமுடியாது என்பது சற்றும் மிகையன்று.

ஆழ்வார்களின் அருளிப்பாடுகளுக்கு எழுந்த உரைகள் மணிப்பிரவாள நடையில் அமைக்கப்பட்டது மிகப் பேரிடையூறாக முடிந்தது என்பதும் உண்மையே. இன்றைய தோழர்களும் தொலைக்காட்சியினரும் திட்டமிட்டுப் பரப்பிவரும் தமிங்கிலீஷ் போன்றது. மணிப்பிரவாள நடை தமிங்கிலீஷ் சமுதாயத்தின் இடைத்தட்டு மக்களை நம்பி வழங்கி வருகிறது. மேல்தட்டு மக்களுக்கு இதுபற்றி நினைக்க நேரம் இல்லை வளர்வது எதுவோ அதன் சார்பில் ஒதுங்கிக் கொள்வர். நகரியங்களிலும் நாட்டுப் புறங்களிலும் வாழும் கீழ்த்தட்டு மக்களே பெரும்பான்மையினராயினும், அவர்களைப்

பொருட்படுத்துவதில்லை. அரசியலில் மட்டுமல்லாமல் கல்வி, மொழி, இலக்கியம் முதலான துறைகளிலும் இதுவே உண்மை நிலவரம். மக்களாட்சி (ஜனநாயகம்) என்பதெல்லாம் தூங்கினவன் தொடையில் திரிக்கும் கயிறு.

கீழ்த்தட்டு மக்கள் விழிப்புற்று விட்டால் – பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்று விட்டால் – மேலாண்மை செலுத்தும் மேட்டுக்குடியினரின் ஆதிக்கம் தொலைந்து போகும். ஆகையினால்தான் தொடர்புச் சாதனங்களைக் கையாளும் கலைத்துறையினர் தமிங்கிலீஷ்வாணர்களாக உள்ளனர். கலைத் துறையினர் எப்போதும் சிறுபான்மையினராகவே இருப்பர்; ஆனால், அவர்களின் கைப்பாவையாகக் கூத்தாடும் கவர்ச்சி, எல்லோரையும் ஈர்த்துப் பிடித்துக் கொள்ளும். ஓர் இனத்தின் பண்பாடு, நாகரிகங்களின் தளர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் கலைத்துறையினரே காரணம் ஆகின்றனர். டாயன்பீ போன்ற வரலாற்று அறிஞர்கள் தெரிவிக்கும் இவ்வுண்மை சமுதாய வரலாற்றின் உயிர்நாடிக் கொள்கையாகும்.

இடைக்கால உரையாசிரியர்களின் மணிப்பிரவாள நடைக்கு உரிய பின்னணியும் இதுதான். சமய ஊற்றும் பரவவேண்டும் என்பதற்காகவே இசைமயமான பாடல்களை நால்வர்களும் ஆழ்வார்களும் தலந்தோறும் பரப்பினர். சைவ, வைணவ அரங்கில் மேலாதிக்கம் செலுத்தியவர்கள் ஆலயங்களில் வடமொழியைப் புகுத்திக் கெடுத்தனர்; அதன் ஒரு 'ஆபாசமே' (மறுவடிவமே) மணிப்பரவாளம்.

பாண்டிநாட்டு இலச்சினை மீன்; மீன் ஆட்சி > மீனாட்சி எனவும் அம்மரபினைச் சேர்ந்த பெருமாட்டி மீன் ஆச்சி > மீனாச்சி இரண்டையும் இணைத்து 'மீனாட்சி' என்ற ஒற்றைவழக்கை நிலைநாட்டியது முதல் நிலை. 'மீனாட்சி'யின் அடுத்த 'ஆபாசம்' மீனாக்ஷியாயிற்று. அதற்கு ஒரு கதையும் உருவாக்கப்பட்டது. 'அக்ஷ' என்றால் கண். வட மொழியில் மீன் தன் முட்டைகளைக் கண்ணால் பார்த்தே காக்குமென்று ஒரு பொய்; அதுபோல மீனாக்ஷி (மீன் கண்ணாள்) தன் திருப்பார்வையால் உயிர்களைப் பேணுகிறாள் – இப்படி ஒரு புராணம். பாண்டிமா தேவியாகிய மீனாச்சி மீனாக்ஷி ஆக்கப்பட்டுப் புராணக் குவியலில் புதைக்கப்பட்டுவிட்டாள்.

மயிலாடுதுறை > மாயூரம் ஆகி மாயவரம் ஆனதும் இப்படித்தான் பழமலை > பழையமலையாய் கிழ மலையாய் விருத்தாசலம் ஆகி, தமிழ் விரும்பிகளால் முதுகுன்றம் ஆனதும் இந்த மொழித் திணிப்பின் 'ஆபாசம்' தான்.

இந்த ஆபாசத்தின் இருபதாம் நூற்றாண்டின் கோலமே தமிங்கிலீஷ் மீன் என்ற தமிழ்ச் சொல்லோடு – ஆச்சியை அக்ஷி ஆக்கி மீனாட்சி அவதரிக்கச் செய்தது. பவுராணிகம்

தமிங்கிலிஷ்காரர்கள் செய்யும் 'ஆபாசம்' பற்றிச் சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

'குட்டீஸ் மிஸ் பண்ணிவிடாதீர்கள்.'
'ப்ளஸ் 1, ப்ளஸ் 2'
'7A, 15C'

இவை எடுத்துக்காட்டுகள் – பானைச் சோற்றுக்கு ஒரே ஒரு பருக்கை பதம் ஆவதுபோல இன்னும் சில

KIDS : குட்டீஸ் கில்லாடிகள்
M. குமரன் S/O மீனாட்சி
சுட்டி TV

நாள் இதழ்கள், வார இதழ்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சியில் காட்டப்படும் காட்சிகள் இவற்றில் வளர்ந்துவரும் தமிழ் + ஆங்கிலம் + சமஸ்கிருத 'ஆபாசங்களைத்' தொகுத்து ஆராய்ந்தால் உருவாகப் போகும் எதிர்காலத் தமிழ் யுனிவர்SITYகளில் ஏராளமான DOCTOR டிகிரிகள் பெறமுடியும்.

கலப்புத் தமிழ் அநாகரிகத்துக்கு ஓர் எல்லையே இல்லாமல் New Tamil வளர்ந்துகொண்டு வருவதைச் செம்மொழிக் காவலர்கள் நோக்குவதாகத் தெரியவில்லை.

சங்க இலக்கியங்கள் முதலியவற்றைச் செம்பதிப்புகளாக வெளியிடுவது, இவற்றில் ஆங்கில மொழியாக்கங்களில் சிறந்தவை எவை எனத் தேடிப் பிடித்து வெளியிடுவது. . . . இப்படிப்பட்ட பணிகள் தேவை அற்றவை என்று எவரும் சொல்லமாட்டார்கள். ஆனால், மணிப்பிரவாள காலம் ஓய்ந்து போனாலும் தமிங்கிலீஷ் வளர்ந்துவரும் விரைவினைப் பார்த்தால், நெருங்கிவரும் நாளைய சமுதாயத்தில் மு.வ., திரு.வி.க. போன்றவர்களின் நூல்களே விளங்காமல் போய்விடும் என்று அஞ்ச வேண்டியுள்ளது. வைணவ உரைகள் போலவே தமிங்கிலீஷ் வளர்கிறது என்பது பாதி உண்மைதான். மணிப்பிரவாள நடை வளர்ந்த காலத்தில், ஏடு பயில்வோர் மிக மிகச் சிலரே. இதழ்கள், தொலைக்காட்சிகள், திரைப்படங்கள் ஆகிய ஊடகங்களே சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றுவருவது இன்றைய நிலை. ஆகவே, மணிப்பிரவாளத்திடமிருந்து தமிழைக் காப்பாற்ற முடிந்தது போல தமிங்கிலீஷிலிருந்து தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் மீட்பது என்பது மிக மிக மிக..............க் கடினம் என்பதை நம் காலத்து அறிஞர்கள் உணரவேண்டும். இல்லையென்றால், "மு.வ.வா ? யார் சார் அது ?" என்று அண்மையில் ஒரு தொலைக்காட்சியில் கேட்க நேர்ந்தது போன்றஅவலங்கள் விளைவதைத் தவிர்க்க முடியாது.

2007 செப்டம்பர் திங்களில்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நூற்றாண்டு விழா நடைபெறு

## தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்,

**இரா. சதாசிவம்**

செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

## இல்ல முகவரி

**இரா. சதாசிவம்**
2/404, மருதுபாண்டியர் தெரு,
வட்டாட்சியர் நகர்,
மதுரை–20.

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம்,
2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. © 2532879.

ஆசை அச்சகம், மதுரை. © 26 222 50, 98434 - 32484

பதிப்பாசிரியர்
பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர் திரு. சுப. அண்ணாமலை
முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் நா. பாலுசாமி
முனைவர் பெ. சுயம்பு
முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர் திரு. செ. கந்தசாமி
முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,